மன்றம்

இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ.

மலர் 4 | 15 - 5 - 55 | இதழ் 2

★

அறிவியல் பேரறிஞர்

ஐன்சுடைன்

★

...டு அணா 4 ★ மாதமிருமுறை ★ வெளிநாடு அணா 5

காவற்கூடத்தில் கடமையுணர்ச்சி

மும்முனைப் போராட்டக் காலத்தில் அறிஞர் அண்ணா அவர்கள், சென்னைக் காவற்கூடத்தில் தள்ளப்பட்டிருந்தபோது, சுமார் 500-க்கு மேற்பட்ட கழகத் தோழர்களும் அதில் புகும்படி நேரிட்டது.

அறிஞர் அண்ணா அவர்களும் மற்றும் சிலரும் 'பி' வகுப்பில் அரசியலாரால் வைக்கப்பட்டிருந்தனர். மற்றைய தோழர்கள் எல்லோரும் 'சி' வகுப்பில் வைக்கப் பட்டிருந்தனர்.

சிறைபுகுந்த கழகத் தோழர்கள், சிறைக்கூடத்தின் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு கடமையும், கட்டுப்பாடும் தவறாமல் நடந்துகொள்ளவேண்டும் என்பதை வற்புறுத்தி அதனைக் காத்துவருவதிலே அறிஞர் அண்ணா அவர்கள் கண்ணுங் கருத்துமாக இருந்துவந்தார்கள். சிறைக்கூடத்தில் சிலபல மாற்றங்கள் தேவை என்றால், அவற்றை அரசாங்கத்திடம் பெற முயலவேண்டுமேயொழிய. சிறை அதி காரிகளோடு மோதிக்கொள்வதில் பலனில்லை என்பதை நன்கு உணர்ந்தே அண்ணா அவர்கள் கடமையை வற்புறுத்தினார்கள்.

ஒருபொழுது,சிறைக்குள் ஒரு குழுவாக நுழைந்த சுமார் 30 கழகத் தோழர் கள், காலையில் வரிசையில் உட்காரவும், அறைக்குள்ளிருக்கும் சிறுநீர்ப்பானைகளை வெளிக்கொண்டுவரவும், சோற்றினைச் சென்று வாங்கிக்கொள்ளவும் மறுத்துவிட்ட னர். சிறை வார்டர்களுக்கும், அந்தத் தோழர்களுக்கும் தகராறுகள் வளர்ந்தன. இச்செய்தி அறிஞர் அண்ணா அவர்கள் காதுக்கு மாலை 4 மணி அளவிற்கு எட்டிற்று. உடனே அண்ணா அவர்கள் தோழர் நெடுஞ்செழியனை அவர்களிடம் அனுப்பி, கழகத் தோழர்கள் தங்கள் தங்கள் சிறுநீர்ப்பானைகளை வெளியே எடுத்து வைக்கமுடியாது என்றால், நாள்தோறும் தாம் வந்து எல்லோருடைய சிறுநீர்ப் பானைகளை எடுத்துவைக்கவும், தட்டுகளிலே சோறு வாங்கிக்கொண்டுவந்து அவ ரவர் அறைகளிலே வைக்கவும் தயாராக இருப்பதாகச் சொல்லச்சொல்லி, அவர்க ளது அனுமதி பெற்றுவரும்படிக் கூறினார். அப்படியே தோழர் நெடுஞ்செழியன் போய்ச் சொல்ல, தோழர்கள் கண்கலங்கி, தம் செய்கைக்கு வருந்தி, "அண்ணா வரவேண்டாம்; நாங்களே முறைப்படி நடந்துகொள்கிறோம். எங்களை மன்னிக்கும் படி அண்ணாவிடம் கூறுங்கள்" என்று விடை சொல்லி அனுப்பினர்.

அறிஞர் அண்ணா அவர்கள் கடமையுணர்ச்சியையும், கட்டுப்பாட்டையும், கண்ணியத்தையும் மிக வற்புறுத்திவந்ததன் காரணமாகத்தான் பொதுவாக எல் லாச் சிறைகளிலும், குறிப்பாகச் சென்னைச் சிறையில், சிறையதிகாரிகள் பாராட்டத் தக்க வகையில் கழகத் தோழர்களின் நிலைமை இருந்தது, சிறையிலே பிற அரசியல் கட்சிக்காரர்கள் நடந்துகொண்ட விதத்தையும், திராவிட முன்னேற்றக்கழகத் தோழர்கள் நடந்துகொண்ட விதத்தையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, சிறை அதி காரிகள், கழகத் தோழர்களைப் பாராட்டவேண்டிய நிலைமைக்கு உள்ளானார்கள்.

மன்றம்

இரா. நெடுஞ்செழியன். எம். ஏ.

15 - 5 - 55 ஞாயிற்றுக்கிழமை

நாணய மாற்றம்

இந்தியத் துணைக்கண்டத்தில், இப்பொழுது நடைமுறையில் இருந்துவரும் நாணயத்தின் உட்பிரிவின் அளவையும், மதிப்பையும் மாற்றி அமைக்க இந்தியப் பேரரசியலார் திட்டம் ஒன்று தீட்டியுள்ளனர். அந்தப்படிக்கு அதனைச் சட்டமாக்கும் மசோதா ஒன்று இந்தியப் பாராளு மன்றத்தில் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அது விரைவில் பாராளு மன்றத்தில் நிறைவேற்றப்பட்டுச், சட்டமாக்கப்பட்டு, நடைமுறைக்குக் கொண்டுவரப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

உலகியல் நடைமுறைக்கு ஏற்ப, இந்திய நாணய அளவீட்டு முறையில் ஒரு ஏற்றமான மாற்றம் ஏற்படுத்த முனைந்திருப்பது, போற்றி வரவேற்கத்தக்க செயலாகும்.

> “புதியன புகுதலும் பழையன கழிதலும்
> வழுவல் காலவகையினானே”

என்ற தமிழ் இலக்கண விதிக்கிணங்க, காலப் போக்கில் ஏற்படும் நல்ல பல சீர்திருத்தங்களைப் போற்றி வரவேற்கத்தான் வேண்டும். அப்படி வரவேற்கத்தக்கவைகளில் ஒன்றுதான் இப்பொழுது கொண்டுவரப்படும் நாணயமாற்றம் ஆகும்.

இந்திய நாணயத்தின் முழுமுதல்டிப்படை, ரூபாய் ஆகும். அந்த ரூபாய் இப்பொழுது 16 அணாக்களாகவும், அந்த அணா 12 பைசாக்களாகவும் பிரிக்கப்பட்டு நாணயச்செலவாணியில் கணக்கிடப்படுகின்றன. இப்பொழுது ரூபாய்களை அணாக்களாக மாற்றவேண்டுமானால் 16-ஆல் அவற்றைப் பெருக்கவேண்டியிருக்கிறது; அணாக்களைப் பைசாக்களாக மாற்றவேண்டுமானால் அவற்றை 12-ஆல் பெருக்கவேண்டியிருக்கிறது. அதுபோலவே பைசாக்களை அணாக்களாக மாற்றவேண்டுமானால் 12-ஆல் அவற்றை வகுக்கவேண்டியிருக்கிறது; அணாக்களை ரூபாய்களாக மாற்றவேண்டுமானால் 16-ஆல் வகுக்கவேண்டியிருக்கிறது. இந்த முறையில் கணக்குப் போடுவதால் ஏற்படும் தொல்லைகளையும், நேரக்கேட்டையும் கூடுமானவரையில் குறைக்கவே புது முறை நடைமுறைக்குக் கொண்டுவரப்படுகிறது. புது முறையில் இப்பொழுதுள்ள ரூபாயே முழுமுதலடிப்படை நாணயமாக இருக்கும். ஆனால் ரூபாய், அணா பைசாக்களாகப் பிரிக்கப்படாமல் 100 சதங்களாக (Cents) மட்டுமே பிரிக்கப்படும். இனி ரூ-அ-பை என்று மூன்று கலம் இராது; ரூ-சதம் என்ற இரண்டு கலந்தான் நடைமுறையில் இருக்கும். இந்த முறையில் ரூபாய்களைச் சதங்களாக மாற்றுவதும், சதங்களை ரூபாய்களாக மாற்றுவதும் மிக எளிது. பத்துப் பத்தாகக் கணக்கிடும் பத்தின்பகுதி (Decimal) முறைப்படி பத்தின் பகுதிப் புள்ளி (Decimal point) யை இரண்டு இடம் பின்னால் தள்ளுவதன் மூலமும், இரண்டு இடம் முன்னால் தள்ளுவதன் மூலமும் முறையே ரூபாய்களைச் சதங்களாகவும், சதங்களை ரூபாய்களாகவும் எளிதில் மாற்றிக் கொள்ளலாம். ரூ-அ-பை-இல் இருக்கும் தொல்லைகள் இந்த முறையில் இருக்கா.

எடுத்துக்காட்டாக ரூ 2-ஐ சதமாக மாற்ற வேண்டுமானால் இரண்டு 00-ஐச் சேர்த்துவிட்டால் 200 என்று சதங்கள் கிடைக்கும். அதாவது ரூ 2·00-இல் உள்ள புள்ளியை இரண்டு இடம் பின்னால் தள்ளிவிட்டால் 200 என்று கிடைக்கும். அதனைச் சத எண்ணிக்கையாகக் கொள்ளவேண்டும். அதுபோலவே 200 சதங்களை ரூபாயாக மாற்றவேண்டுமானால் புள்ளியை இரண்டு இடங்கள் முன்னால் தள்ளினால் 2·00 என்று கிடைக்கும். அதனை ரூபாய் எண்ணிக்கையாகக் கொள்ளவேண்டும். ஒவ்வொரு முழு எண்ணை அடுத்து அதன் இடது பக்கத்தில் புள்ளி ஒன்று இருப்பதாகவும், புள்ளியை அடுத்துக் கணக்கற்ற 0-க்கள் இருப்பதாகவும் கணக்கு முறையில் கொள்ளப்படும். ரூ 2-ம் சதம் 55-ம் இருக்கின்றன என்றால் அவற்றை ரூபாயாகக் காட்டவேண்டுமானால் ரூ 2·55 என்று காட்டவேண்டும்; அவற்றைச் சதமாகக் காட்டவேண்டுமானால் சதம் 255 என்று காட்டவேண்டும். ரூபாயைச் சதமாகக் கணக்கிடுவதற்கும், சதத்தை ரூபாயாகக் கணக்கிடுவதற்கும் இந்த முறை கேட்டஅளவிலேயே செய்யக்கூடிய எளிமை வாய்ந்ததாக இருப்பதால், உலகின் பலநாடுகள் இந்த முறையை முன்னாலேயே விரும்பி ஏற்றுக் கொண்டிருக்கின்றன. இந்தியத் துணைக்கண்

Best copy available

கருத்துக் கதிர்

பேச்சு இனிப்பு! நடப்பு கசப்பு!

“ இந்தியாவில் எல்லோர்க்கும் அவர் இந்து, கிருத்து, முசிலிம், செயின், பௌத்தம், பார்சி போன்ற எந்த மதத்தைச் சார்ந்தவராக இருந்தாலும், நாத்திகர்க்கும் கூட சம உரிமை உண்டு ”

இவ்வாறு பண்டித நேரு மே 8-ம்நாள் பெர்காம்பூரில் நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் பேசும்போது குறிப்பிட்டுள்ளார். இந்தியப் பேரரசின் முதல்மைச்சரான பண்டித நேரு அவர்களின் கூற்றைப் பிற அரசாங்க ஆணையாளர்கள் எந்த அளவுக்குப் போற்றிக் கடைப்பிடிக்கிறார்கள் என்பதுதான் கேள்வி!

மதத்தைப் பற்றி ஒருவன் கொண்டிருக்கும் கருத்து, அவன் அரசியல்—பொருளியல்—சமூகவியல் உரிமைகளைப் பெறுவதில் எவ்வகையிலும் குறுக்கே வைத்து எண்ணப்படமாட்டாது, அதாவது, ஒருவன் மதத்தைப் பற்றி என்ன கருத்துக்கொண்டிருந்தாலும், அவன் நாத்திகனாகவே இருந்தாலும் அவன் அரசியல்—பொருளியல்—சமூகவியல் துறைகளில் முழு உரிமையையும் நுகரலாம் என்பதே பண்டித நேருவின் கருத்தாகும். ஆ சென்னை அரசியலாரைப் போன்றவர் 'நாத்திகர்கள்' என்று மதவாதிகளால் சுட் காட்டப்படும் பகுத்தறிவுவாதிகளைப் ப களில்—கல்லூரிகளில் பேசுவதற்கு அ மதிப்பதில்லை; பகுத்தறிவுவாதிகளின் ச வரம்புக்கு உட்பட்ட ஏடுகளையும், நூல்களை அரசாங்க அலுவலாளர்கள், கையில் ஏ அனுமதிப்பதில்லை; அவைகளைப் பொ நூல்நிலையங்களில் வைக்க இசைவு த தருவதில்லை; அரசாங்க அலுவலாளர்க அல்லது ஆசிரியர்களோ பகுத்தறிவுவா களாக இருக்க ஒப்புவதில்லை; அரசாங் தின் சலுகைகளை மதவாதிகளுக்கு அ பதைப்போல் பகுத்தறிவுவாதிகளு அளிக்க ஒருப்படுவதில்லை; உயர் நீதிம நீதிபதி முதல் ஊர்க் கணக்கப்பிள்ளை வரை எல்லோரையும் வெளிப்படையாகவே ம பிரசாரம் செய்ய அனுமதிப்பதைப்போ பகுத்தறிவுப் பிரசாரம் செய்ய அவர்க அனுமதிப்பதில்லை. இவ்வளவு கொடுமை பகுத்தறிவுவாதிகளுக்கு அரசியலா இழைக்கப்படுகின்றன. மேலே சுட்டிக்காட் பட்ட நிலைமைகளில் சம உரிமைக்கு இ எங்கே இருக்கிறது? இன்றைய அரசாங் துக்குப் பெயர்தான் 'மதச்சார்பற்ற அரச கமே' ஒழிய, ஆனால் உண்மையில் முழு முழுக்க அது 'மதச்சார்புள்ள அரசாங்கமா' தான் இருந்துவருகிறது! நேரு சர்க்கா இந்தப் பேச்சு இனிப்பாக இருக்கிறது; ஆ அதன் நடப்பு கசப்பாகவே காட்சியளிக்கிற

டம் இப்பொழுது ஏற்றுக்கொள்ள முன்வந்திருப்பது பாராட்டுவதற்குரியதாகும். இனி 50 சதங்கள் ½ ரூபாய் என்றும், 25 சதங்கள் ¼ ரூபாய் என்றும் பெயர் பெறும்.

ஒன்று—நூற்றிலொன்று என்ற இரண்டு பிரிவுகளை மட்டுமே அடிப்படைப் பிரிவுகளாகக் கொண்டிருக்கும் தன்மையை ஏற்றதாகவும், எளிதானதாகவும் கருதி உலகில் பல நாடுகள் தங்களது பல்வேறுபட்ட பழைய முறைகளை மாற்றிக்கொண்டிருக்கின்றன. இலங்கை ரூபாய்—சதம் என்ற முறையைத்தான் கைக்கொண்டிருக்கிறது. அமெரிக்கா டாலர்—சதம் என்றுதான் கொண்டிருக்கிறது. மற்றும் சப்பான், செர்மானி, கனடா, இசுகாண்டிநேவியா, பர்சியா, பிரான்சு போன்ற பலநாடுகளும் ஒன்று—நூற்றிலொன்று முறையைத்தான் மேற்கொண்டிருக்கின்றன. இங்கிலாந்துதான் தன்னுடைய பவுன்—சில்லிங்—பெ முறையை மாற்றிக்கொள்ளாமலிருக்கிற ஒன்று—நூற்றிலொன்று முறைதான் எல் விதத்திலும் சிறந்தது என்பதை நன்கு உ ரலாம். அந்த முறையை நடைமுறைப்படு இந்தியப் பேரரசு முயலுவது போற்றவே டியதாகும்.

ரூ—சதம் முறையை மக்கள் நன்கு புரிந்துகொண்டு பழக்கத்தில் அத கொண்டுவரும் காலம் வரையிலும் ரூ-அ- முறையும் இருந்துவரும் என்று சொல்லப் கிறது. இந்த மாற்றம் தொடக்கத்தில் சி தளவு தொல்லையைக் கொடுத்தாலும் போ போக நாள்டைவில், மக்களுக்கு ஏற்றதாக எளிதாகவும், பிடித்தமாகவும் அந்த மு விளங்கும் என்பதில் ஐயமில்லை. நாணய மா தேவையான ஒரு சீர்திருத்தமேயாகும்!

தமிழில் வழிபாடு

தமிழ்நாட்டுக் கோயில்களில் 'வழிபாட்டுரை' வடமொழியிலேயேதான் இருந்துவர வேண்டுமா, அல்லது தமிழ் மொழியிலே கொள்ளப்படவேண்டுமா என்பன பற்றிய கருத்துக்கள் இப்பொழுது சற்று மிகவாகப் பரிமாறப்படுகின்றன.

வழிபாட்டுரைகள் வடமொழியிலேதான் இருக்கவேண்டும் என்ற கருத்தைக் கோயில் குருக்கள்மார்களும், பஞ்சாங்கப் புரோகிதர்களும், வடமொழிப் பற்றுக்கொண்டோரும், வடமொழியாளர்க்கு அடிமைபோனோரும் வற்புறுத்திவருகின்றனர். வழிபாட்டுரைகள் தமிழிலே இருக்கவேண்டும் என்ற கருத்தைக் குன்றக்குடியார் போன்றவர்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

மூடநம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டு, வடமொழி எப்படிப்பட்ட ஆதிக்கத்தைக் கோயில்களில் செலுத்திவருகிறது என்பதைச் சுட்டிக்காட்டி, வழிபாட்டுரைகள் தமிழில் இருந்தால் அது 'ஆண்டவனு'க்கு ஆகாமல் போய்விடுமோ என்று கேட்டுப், பகுத்தறிவாளர்கள் சென்ற சிலகாலமாகக் கேலிமொழி சிலவந்ததன் காரணமாகக், கோயில்களில் தமிழில் வழிபாட்டுரை நிகழ்த்தப்பெறவேண்டும் என்ற உணர்வு குன்றக்குடியார் போன்றவர்களுக்கு இதுநாளில் ஏற்பட்டிருக்கிறது. இந்த அளவுக்கு நமக்கு மகிழ்ச்சிதான்!

பக்தகோடிகள் இருக்கும் காலம் வரையில் கோயில்களில் வழிபாட்டுரைகள் இருக்கத்தான் செய்யும்; அப்படி இருந்து தீரப்போகிற வழிபாட்டுரைகள், பொருளை உணர்ந்துகொள்ளமுடியாத வடமொழியிலே இருப்பதைக்காட்டிலும், பொருளுணர்ந்து, கருத்தின் சுவையை அவ்வளவாகப் பெறமுடியாவிட்டாலும் ஒலியின்பம் நுகரக்கூடிய அளவில் தமிழில் இருப்பது நல்லதல்லவா என்ற முறையில்தான் நாம் தமிழ் வழிபாட்டுரைகளை எதிர்பார்க்குகிறோம்.

கோயிலிலே உள்ள 'ஆண்டவனு'க்கு வடமொழி வழிபாட்டுரை பிடிக்குமா, அல்லது தமிழ் வழிபாட்டுரை பிடிக்குமா என்ற விவாதத்தில் வைதீகர்களில் சிலர் இறங்கியிருக்கிறார்கள். வழிபாட்டுரைகளைக் கேட்டுக்கொள்கிற மாதிரியில் கோயிலிலே மக்களைத்தவிர வேறு ஏதொன்றும் இல்லை; அங்குள்ள சிலைகள் வழிபாட்டுரைகளை வழங்கினாலும் அப்படியேதான் அசைவற்று இருக்கும், வழங்காவிட்டாலும் அப்படியேதான் இருக்கும். வடமொழியில் கூறினாலும் சரி, ஆங்கில மொழியில் கூறினாலும்சரி, உருதுமொழியிலே கூறினாலும் சரி, நீக்ரோமொழியில் கூறினாலும் சரி, தமிழில் கூறினாலும் சரி அந்தச் சிலைகள் அப்படியேதான் இருக்கும்! கோயிலிலே வழிபாட்டுரை வழங்குவது ஏதோ ஒருவிதப் பொழுதுபோக்கு! அந்தப் பொழுதுபோக்குத் தமிழ்நாட்டில் தமிழில் நடைபெறட்டும் என்றுதான் நாமும் விரும்புகிறோம்!

ஃ ஃ ஃ

இந்தி வெறி

இந்தியை ஆங்கிலத்திற்குப் பதிலாக இந்தியாவின் அரசியல் மொழியாக்கும் முயற்சி பதினைந்து ஆண்டுக் காலத்திற்குள் நிறைவேற்றப்படவேண்டும் என்ற அரசியல் சட்டதிட்ட விதியில் உள்ள காலக்கெடுவை, 'இருபத்தைந்து ஆண்டுக்குள்' என்று மாற்றி அமைக்கவேண்டும் என்று தென்னாட்டுக் காங்கிரசுக்காரர் ஒருவரின் கோரிக்கையை, வடநாட்டு சேத் கோவிந்ததாசு மிக வன்மையாக எதிர்த்துள்ளார். தம் தாய்மொழியாம் இந்தியை இந்தியாவின் ஆதிக்க மொழியாக்க வேண்டும் என்பதிலே சேத் கோவிந்ததாசு போன்றவர்களுக்கு எவ்வளவு 'ஆவேசம்' இருக்கிறது என்பதை அறிந்துகொள்ளலாம். "ஏகபாஷை வெறியர்களின் பைத்தியம் இவ்வளவு அவசரமாகவா முற்றவேண்டும்" என்று தோழர் ஆச்சாரியார் குறிப்பிட்டது தோழர் சேத் கோவிந்ததாசைப் பொறுத்த வரையில் முற்றிலும் பொருந்தும்!

ஃ ஃ ஃ

கலைச்சொல் ஆக்கம்

அறிவியல் போன்ற பல்வேறு துறைகளில் கையாளப்படும் அருங்கலைச் சொற்களைத், தமிழில் காணவேண்டும் என்ற உணர்வு, சென்னை அமைச்சர் குழுவில் இருக்கும் ஒரு சிலர்க்கும் ஏற்பட்டிருப்பது மகிழ்ச்சிக்குரியதாகும். ஆங்கிலமும் தமிழும் நன்கு கற்றுத்,

துறைபோய அறிஞர் பெருமக்கள் அடங்கிய குழு ஒன்றினை அமைத்து, அருங்கலைச் சொற்களை எளிய நற்றமிழில் கண்டுபிடிக்கும் பணியினை அதனிடம் ஒப்படைத்து, போதிய வசதிகளையும் வாய்ப்பினையும் அக்குழுவிற்கு ஏற்படுத்தித் தந்தால், ஓரிரு ஆண்டுகளில் தேவையான அருங்கலைச் சொற்களை எளிதில் பெற்றுவிடலாமே. அத்தகைய குழுவில் தமிழ்ப் பற்றுடைய நல்லறிஞர்கள் இடம்பெற வேண்டுமே ஒழிய, தமிழுக்குப் பகைவர்களாக விளங்கும் உள்ளம்படைத்தோர் — வேற்று மொழியிடத்துத் தனிவிருப்பங்காட்டித் தமிழைப் புறக்கணிப்போர் ஆகியோர் இடம் பெறுதல் கூடாது. சென்னை அரசியலார் கலைச்சொல் ஆக்கக் குழுவை அமைக்கும் பணியினை முக்கியமான பணியாகவும், முதன்மையான பணியாகவும் கொள்ளவேண்டும். இதற்காக ஒரு சில இலட்ச ரூபாய்களை ஒதுக்குவது எவ்வளவோ பலன் தருவதாகும். எதெதற்கோ வீணாகச் செலவிடப்படும் பணம் இந்தவகையில் திருப்பிவிடப்பட்டால் அது நாட்டிற்கும் எதிர்கால நல்வாழ்வுக்கும் நன்கு பயன்படுவதாகும். கூடுமானவரையில் தமிழில் இருக்கும் செந்தமிழ்ச் சொற்களையே பயன்படுத்தவும், இயன்றால் எளிய இனிய காரணச் சொற்களைக் கண்டுபிடிக்கவும், இயலாத இடங்களில் தமிழ் ஒலிக்குறிப்புக்கு உகந்தவகையில் வேற்றுமொழிச் சொற்களை அப்படியே எடுத்துக்கொள்ளவும் கலை ஆக்கச் சொற்கள் கண்டுபிடிக்கும்போது கடைபிடிக்க வேண்டும். தமிழ்ப்பெருமக்களும், ஆங்காங்குள்ள தமிழ் அமைப்புகளும் மேலே சுட்டிக் காட்டப்பட்டுள்ள கோரிக்கை நிறைவேறும் வண்ணம் சென்னை அரசியலாரை வற்புறுத்துவார்களாக!

ஃ ஃ ஃ

உண்மையான கூற்று

பண்டித நேரு பண்டுங் மாநாடு முடிந்து டில்லி வந்து சேர்ந்தவுடன், இந்தோ-எகிப்திய நட்புறவுச் சங்கம், பண்டித நேருவையும், எகிப்தைச் சேர்ந்த டாக்டர் சாகீர் உசேனையும் வரவேற்றுப்பாராட்டுக்கூட்டம் ஒன்றை அண்மையில் டில்லியில் நடத்திற்று. இதில் பண்டித நேரு பேசும்போது, தம்மிடம் அரிய பண்புகள் இருந்தபோதிலும், தமக்குப் பொறுமை மாத்திரம் கிடையாது என்பதை வெளிப்படையாகவே ஒப்புக்கொண்டு பேசியுள்ளார். டாக்டர் சாகீர் உசேன் பண்டித நேருவைப் புகழ்ந்து பேசும்போது, நேரு மிகுந்த பொறுமைசாலி
என்று பாராட்டிப் பேசியதற்கு விடைக
முகத்தான், நேரு மேற்கண்டவாறு சொ
யுள்ளார். பண்டித நேருவின் பலவ
கூற்றுக்களிலே நூற்றுக்கு நூறு உண்
யான கூற்று இதுதான்.

அவருடைய வாழ்க்கை வரலாற்
துருவி ஆராய்ந்துபார்த்தால் அவர் தம்
மறந்து, பொறுமையிழந்து நடந்துகொ
கட்டங்கள் பலப்பல காணப்படும். அ
பொறுமையிழந்து பேசிய பேச்சுக்கள்
தென்னாட்டு மக்கள் தெளிவாகப் புரி
கொள்ளக்கூடிய மாதிரியில், சிலவற்
குறிப்பிட்டுச் சொல்லவேண்டுமானால், அ
தாம், திராவிட இயக்கத்தாரைப் பார்
ஒருமுறை "சிறுபிள்ளைத்தனமான முட்ட
தனம் வாய்ந்தவர்கள்" என்று சொல்லியு
வேறொரு முறை "காட்டுமிராண்டிகளைக் க
டிலும் கேவலமானவர்கள்" என்று செ
தும், வேறொருமுறை "திராவிடநாட்டுப்
வினை கேட்கும் இவர்கள் பைத்திய
மருத்துவ விடுதியில் வைக்கப்படவேண்
வர்கள்" என்று சொல்லியதும் அ
பொறுப்புள்ள நேரு பொறுமையிழந்து
பவர் என்பதை நாம் முன்கூட்டியே அறி
கொள்வதற்கு மேற்கண்ட கூற்றுக்
சான்று பகர்வனவாக நின்றன. இப்பொ
பண்டித நேருவே அந்தப் பொறுமை
கும் பண்பு தமக்கு உண்டு என்பதை ஒ
கொண்டிருக்கிறார். அது உண்மையான
றாகும்!

ஃ ஃ ஃ

மூடநம்பிக்கை குதியாட்டம் போடுகிறது

காரைக்காலுக்கு அருகில் 14-வது மை
உள்ள பாவட்டக்குடிச் சிற்றூரில், ஒரு
னிப்பெண் அம்மைநோய்வாய்ப்பட்டு இற
பட்டாளாம். அவளுக்குக் கல்லறை ஒ
எழுப்பப்பட்டதாம். அந்தக் கல்லறை
இப்பொழுது 'மகிமை' ஏற்பட்டிருக்கிற
தீராத நோய்களையெல்லாம் தீர்த்துவை
அந்தக் கல்லறை என்று கருதி ஞா
தோறும் 5000-க்கு மேற்பட்ட மக்கள் செ
குவிகிறார்களாம். அந்தக் கல்லறை திருவி
கோலம்கொள்கிறதாம். நோய்வாய்ப்
இறந்துபட்ட பிணம், தீராத நோயெல்
தீர்க்கிறதாம்! என்னே மூடநம்பிக்
என்னே அறியாமை!



பனிவெளியில்

இரா.செழியன்

(15-4-55 இதழ்த் தொடர்ச்சி)

வழி நீண்டதாக இருந்தது. குலசேகரன் ாதையோரத்தில் நடந்துகொண்டிருந்தான். வன் எங்கோ பார்த்துக்கொண்டிருந்தான், ார்வை வெறிச்சென்றிருந்தது, கால்கள் ட்டும் நடமாடிக்கொண்டிருந்தன. அது எந் த் தெரு? எங்கு போகிறது? அவனுக்குத் தரியாது.

ஒரு பூங்கா—நகரசபைப் பூங்கா—கூட்டம் திகமில்லை—அங்கு மூலையில் போடப்பட் ருந்த பலகையில் குலசேகரன் அமர்ந்து லையைப் பிடித்துக்கொண்டான். உலகமே ற்றுவதுபோலிருந்தது. கண்ணை எவ்வளவு ான் உன்னிப்பாக ஆக்கிப் பார்த்தாலும், க்கத்திலுள்ள மரம், செடி கொடிகள் சரியா த் தெரியவில்லை, இன்னும் பொழுதுபோக ில்லை, மாலை நேரம்தான் ஆனால் கண்களின் ன் புகைபடர்ந்து, மயக்கம் வரும்போலிருந் து.

என்ன நடந்தது? அவனுக்குச் சரியாகப் ரியவில்லை. கமலநாதன் விரலைச் சுட்டிக் ாட்டி, ஏதோ குற்றஞ்சாட்டுகிறான்—குற்ற ாளிக்கூண்டில் சகுந்தலா மயக்கத்தால் ழுந்துகிடக்கிறாள்—டாக்டர் தங்கம் போய், வனை நிமிர்த்தி உட்காரவைத்து, முகத்தில் ர் தெளிக்கிறாள்—நீதிபதி ஏதோ சொல்லி ட்டு எழுந்துபோகிறார்—கோர்ட்டிலிருந்தவர் ள் குற்றவாளிக்கூண்டைச் சூழ்ந்துகொள்ளு றார்கள்—கமலநாதன் அவனை முறைத்துப் ார்த்துவிட்டுப் போகிறான்—குலசேகரன் ட்டும் தனியாக நிற்கிறான்-பிறகு கோர்ட்டை ட்டு வெளியேவந்து நடக்கிறான்.

இப்பொழுதும் அவன் தனியாக உட்கார்ந் ருக்கிறான்—உலகத்தில் தனியாக இருக் றான்.

இவ்வளவுகாலம் யாருக்காக அவன் வாதா டிக்கொண்டிருந்தான்? ஒரு பெண்—மணமா காத பெண்—ஆனால் குழந்தையுடன் காணப் பட்ட பெண்! சே! அதிலும், ஒரு கடிதம்கூட அவன் எழுதிவிட்டான். அந்தக் கடிதம் இப் பொழுது கையில் கிடைத்தால், ஆயிரம் சுக் கல்களாகக் கிழித்தெறிந்துவிடலாம்.

"கணவன் இறந்ததாகக் கூறுவது பொய்! எதிரியின் கணவன் இறந்திருக்கமுடியாது! ஏனென்றால், எதிரிக்கு இன்னும் திருமணமே ஆகவில்லை" கமலநாதன் கூறுவது அவன் காதுகளில் ஒலித்தது. காதைப் பொத்திக் கொண்டு, குலசேகரன் உட்கார்ந்திருந்தான்.

அவனுடைய சிறுவயதில், ஆற்றங்கரையில் இருந்த ஒரு பெரிய மரத்தை வெட்டிக் கொண் டிருந்தார்கள். வெட்டுபவர்கள் எதிர்பார்ப்ப தற்கு முன்னதாகவே, திடீரென்று, பலத்த சத்தத்துடன் மரம் விழுந்துவிட்டது. சிறுவ னான குலசேகரன் பயத்துடன் தூரமாக ஓடிப் போய் திரும்பிப் பார்த்தான். கிளைகள் அடர்ந்து கீழே பரவிக்கிடந்தது, மரக்கிளையில் கீழே ஒருவன் அகப்பட்டு, கூவிக்கொண்டிரு தான். மற்றவர்கள், கிளைகளை விலக்கி கொண்டு, அவனைத்தேடி இழுத்துப்போட் டார்கள். அவனுடைய முதுகிலும், முகத்தி லும் அடிபட்டு, வாயில் வழியாக இரத்தம் வழிந்திருந்தது. அந்தப் பயங்கரக்காட்சி, சிறுவனான குலசேகரன் மனதில் நடுக்கத்தை உண்டாக்கியது. இப்பொழுது, அதேபோல, அழகிய, உயர்ந்த மரமொன்று அவன் அண் ணாந்து பார்த்துக்கொண்டிருக்கும்பொழுது, திடீரென்று அது பலத்த சத்தத்துடன் கீழே விழுந்துவிட்டது, வேடிக்கை பார்த்துக்கொண் டிருந்த குலசேகரன் அந்த மரத்தின்கீழ் அகப் பட்டுவிட்டான். அவனைக் காப்பாற்ற யாரும் வரவில்லை.

குலசேகரன் தன்னைத்தானே வெறுத்துக் கொண்டான். தீர ஆராயாமல், மிக அவசரப் பட்டு, அவளுக்காக வாதாட முன்வந்தான், பின் காதற்கடிதமும் அனுப்பினான்! வாழ்க்கையில் ஒருதடவைச் செய்துவிட்டதை மீண்டும் அழித்துவிட முடியாது.

"சார்! சார்!" என்று, சத்தம் வந்தது.

குலசேகரன் கண்ணைவிழித்துப் பார்த்தான். பூங்காவின் தோட்டக்காரன். "கதவை மூட வேண்டும்."

பூங்காவின் மத்தியிலிருந்த கடிகாரம் ஒன்பது மணி காட்டியது.

குலசேகரன் எழுந்து தோட்டத்தைவிட்டு வெளியே வந்தான். தோட்டக்காரன் விரட்டுகிறான். உலகிலுள்ள ஒவ்வொருவரும் அவனை விரட்டுவதுபோலிருந்தது. தெருவுக்கு வந்ததும், சுற்றிலும் பார்த்தான். அந்த நீண்ட பாதையின் இருமருங்கிலும் தொடர் விளக்குகள் ஒளிவிட்டுக்கொண்டிருந்தன. அவன் கால்கள் நடக்க ஆரம்பித்தன. கண்கள் தூரத்தில் சூழ்ந்திருந்த இருளைப்பார்த்துக்கொண்டிருந்தன.

* * *

"தம்பி! தம்பி!" தூரத்திலிருந்து யாரோ கூப்பிட்டுக்கொண்டிருந்தார்கள். குலசேகரன் கண்விழித்துப் பார்த்தான். நல்ல வெளிச்சம்! திடுக்கிட்டு எழுந்து உட்கார்ந்தான். பகல்! கடிகாரத்தில் மணி 2-35 காட்டியது. எதிரில் அவனுடைய சின்னம்மா அஞ்சலையம்மாள் கூப்பிட்டுக்கொண்டிருந்தார்கள்.

"நீண்டநேரம் தூங்கிவிட்டேன்!" குலசேகரன் எழுந்து வெளியே வந்தான்.

"உடம்புக்கு ஏதாவது சரியில்லையா? காலையில் இரண்டுதடவை எழுப்பினேன், நீ எழுந்திருக்கவில்லை! இப்பொழுதும் அசைந்து கொடுத்துப் படுத்துவிட்டாய்!"

குலசேகரன் பல்துலக்கிவிட்டுக் கண்ணாடியில் பார்க்கும்பொழுது, முகம் வெளிறிட்டிருப்பது தெரிந்தது.

கண்ணை மூடிக்கொண்டு, அவன் சிறிது நேரம் உட்கார்ந்திருந்தான். முதல் நாள் கோர்ட்டில் நடந்த சம்பவங்கள் மனதில் மூண்டன. அவைகளை மறக்க—மறைக்க முயன்றான். அதிக வலிவுடன் மீண்டும் வந்தன. குழப்பம் நிறைந்த உள்ளம் அமைதி பெற வில்லை. மீண்டும் படுக்கையில் படுத்துக் கொண்டான்.

சகுந்தலாவைப் பற்றி, அத்தகைய முடிவை—செய்தியை அவன் எதிர்பார்க்கவில்லை. அவளைப்பற்றிய குற்றத்தை வெளியிட்ட கமலநாதன்மீது அவனுக்குக் கடுங்கோபம் உண்டானது. கமலநாதன் என்ன செய்வான்? வழக்கைப்பற்றிய விவரங்களை ஆராய்ந்தெடு பதில், அவனுக்குக் கிடைத்த உண்மைகளை வெளியிட்டான். சகுந்தலா இவ்வளவு நாள் வரையில், தனது கணவன் இறந்துவிட்டான் என்று மற்றவர்களிடம் சொல்லிவைத்திருந் தாள். அந்தப் பொய் அன்று வெளியாக்கப் பட்டது அவ்வளவுதான். கமலநாதன் எந் வகையில் பொறுப்பு? எல்லாவற்றிற்கும் அவள்தான் காரணம்! பார்ப்பதற்கு எவ் ளவு களங்கமற்றவளாக—ஒரு பழி பாவ அறியாதவளாக நடித்துவந்தாள். "அப்பப்ப எவ்வளவு மோசம்!" எப்படித்தான் ஒழுக் கேடுகளைப் புரிய அவர்கள் முன்வருகிறார்க சகுந்தலாமீது அடங்காத வெறுப்பு குலசே னுக்கு வந்தது. இதுவரை அவளுடை விடுதலைக்காக வாதாடிய அவனுக்கு, சரியா தண்டனை அவளுக்குத் தந்தால்தான் நல்ல என்று தோன்றியது.

கடைசியாக "மற்றவர்களைச் சொல்லி பயனென்ன? அவர்கள் எப்படியோ இரு கிறார்கள். நான் கண்காணிப்பாக இருந்திரு வேண்டும். ஏமாந்த குற்றந்தான், இவ்வள வேதனைகளைத் தாங்கவேண்டியிருக்கிறது தன்னைத்தானே அவன் நொந்துகொண்டா

அழகான ஓவியம்! அதைப்பார்த்து வியந் கொண்டிருக்கும்பொழுது, திடீரென்று கு பிய சாயம் அதன்மீது வீசப்பட்டால் எப் யிருக்கும்! அவன் மனத்திரையில் எழு பட்ட சகுந்தலாவின் ஓவியத்தின்மீது, மா தூவப்பட்டுவிட்டது. ஓவியத்தை அழிக்க முடியாமல், மாசை அகற்றவும் முடியாம குலசேகரன் வேதனைப்பட்டான்.

இரண்டு, மூன்று நாட்கள்—குலசேகர எங்கும் போகாமல் வீட்டினுள் அடைபட் கிடந்தான். மனக்குழப்பம் ஓரளவு அடங்கி லும், மனதில் ஏற்பட்ட அசைவு—வேத தீரவில்லை. எங்கேயாவது வெளியூர் செல்ல மெனத் திட்டமிட்டான். கோர்ட்டுகளி பத்து நாட்களுக்கு விடுமுறை இருந்த கடைசியாக வெளியூர் போவதற்குமுன் கத்தைப் பார்த்துவிட்டுப்போவதென, வெ கிளம்பினான்.

குலசேகரன் போனபொழுது, தங்கம் வீட்டி லில்லை. கமலநாதன் மட்டும் இருந்தான்.

"ஏன், உடல் நலமில்லையா?" என்று கமல நாதன் கேட்டான்.

"இரண்டு நாட்களாகக் காய்ச்சல். இன்று கொஞ்சம் குணம்!" என்று குலசேகரன் சொல்லி வைத்தான். சகுந்தலாவைப் பற்றிய கமல நாதனுக்குக் கிடைத்துள்ள விவரங்களைக் கேட்கவேண்டுமென்று குலசேகரனுக்குத் தோன்றியது. அது தொழில்முறையில் சரியானதல்ல. மேலும் சகுந்தலாவைப்பற்றி அதிக அக்கரைகாட்டுவதாக அது முடியும்.

ஆனால் கமலநாதனே அந்த வழக்கைப் பற்றிப் பேச ஆரம்பித்தான். "முதலில் நான் இதை எதிர்பார்க்கவில்லை. போலிஸ் ரிபோர்ட்டை வைத்துப்பார்த்தால், முதலில் கொடுத்த பெயர் தவருக இருந்தது. ஆதலால் மறுபடியும் தேடிக் கண்டுபிடிக்கச் செய்தேன். அப்பொழுது அவள் தற்கொலை செய்து கொள்ள முற்பட்டதற்குத் தக்க காரணம் இருக்கிறது."

அந்தப் பேச்சைத் தொடர, குலசேகரனுக்கு விருப்பமில்லை. "ஏதோ, வழக்கு வந்தது! நடத்துகிறேன்!" என்று அதிக அக்கரையில்லாதவன்போல், குலசேகரன் பேசினான்.

"என்ன, அப்படிச் சொல்லுகிருய்? வழக்கை ஆரம்பித்தபொழுது, நீ நடத்திய விசாரணையைப் பார்த்தால், அதிக உற்சாகத்துடன் இருந்தாய்! பின் எப்படி வழக்கை எடுக்கொண்டாய்?" கமலநாதன் மேலும் சொல்ல நினைத்து, சொல்லாமல் நிறுத்திக் கொண்டான்.

"தங்கம் கேட்டுக்கொண்டதால், நான் அந்த வழக்கை ஏற்றுக்கொண்டேன், தங்கத்துக்காகத்தான், நடத்துகிறேன். அதைத் தவிர, எனக்கு வேறெந்த அக்கரையும் கிடையாது" கமலநாதனிடம் சொல்லியதைவிட, தன்னை அவ்வாறு ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று நினைத்தே, குலசேகரன் அவ்வாறு சொன்னான்.

"தங்கம் வந்ததும், நான் பார்த்துவிட்டுப் போனதாகச் சொல்லவும். நான் வெளியூர் போகிறேன். சகுந்தலா வழக்கு மீண்டும் எப்பொழுது விசாரணைக்கு வருகிறது?" என்று குலசேகரன் கேட்டான்.

"கோர்ட் திறந்ததும், அடுத்த மாதம் மூன்றாம்தேதி!"

"தங்கம் இப்பொழுது எங்கிருப்பாள்?"

"ஆஸ்பத்திரியில்தான் இருக்கவேண்டும்."

"சரி, நான் போகிறேன். வணக்கம்!"

காரை எடுத்துக்கொண்டு, குலசேகரன் ஆஸ்பத்திரி நோக்கிப் புறப்பட்டான். பாதி தூரம் போனதும் அவனுக்கு ஒரு எண்ணம் தோன்றியது. ஆஸ்பத்திரியில் தங்கத்தைப் பார்க்கப்போகும்பொழுது, சகுந்தலாவையும் பார்க்க நேரிட்டுவிட்டால்—அன்று கோர்ட்டில் சகுந்தலா மூர்சையானதும் அவளை ஆஸ்பத்திரிக்குத்தான் அழைத்துக்கொண்டுபோனார்கள்—அந்த சந்தர்ப்பத்தை அவன் விரும்பவில்லை. அவன் எல்லாவற்றையும்—அவ்சிய மற்றவைகளை மறந்துவிடவேண்டும். அந்த நிலையில் சகுந்தலாவைப் பார்ப்பதில் என்ன பலன்? காரைத் திருப்பிக்கொண்டு, குலசேகரன் தன்விட்டை நோக்கிப் போனான்.

போகிற வழியில், டாக்டர் சஞ்சீவியைப் பார்க்கலாமென்று அவனுக்குத் தோன்றியது, அவரைப் பார்த்து, தான் வெளியூர் போவதைச் சொல்லிவிட்டுப் போய்விடலாம். தங்கத்திற்கும் அவர் சொல்லிவிடுவார். வழக்கைப்பற்றி அவர்கள் கவலைப்பட்டால், ஏதாவது சமாதானம் சொல்லிவிட்டுப் போகலாம் என்று நினைத்தான்.

டாக்டர் சஞ்சீவி தோட்டத்தில் காரை நிறுத்திவிட்டு, குலசேகரன் வீட்டினுள் போனான். யாரையுங் காணேம். அப்பொழுது தான், டாக்டர் சஞ்சீவியும் ஆஸ்பத்திரியில் இருப்பார் என்று அவனுக்குத் தோன்றியது. போகலாமென்று வெளியே வந்தான்.

முன்ஹாலுக்குப் பக்கத்தில், ஒரு கட்டிலில் சகுந்தலா படுத்திருப்பது அவனுக்குத் தெரிந்தது. சகுந்தலாதான்! அவள் அங்கிருப்பாளென்று சிறிதும் எதிர்பார்க்கவில்லை, நல்லவேளை அவள் வேறுபக்கம் பார்த்துக் கொண்டு படுத்திருந்தாள். அவளைப் பார்ப்பதற்கே கண் கூசுவதுபோலிருந்தது. அவ்வளவு கோபமும், வெறுப்பும் அவனுக்கு உண்டாயின. எதிர்பாராது ஏற்பட்ட திகைப்பில், சிறிதுநேரம் குலசேகரன் நின்றுகொண்டிருந்தான்.

"ஏன், நின்றுகொண்டிருக்கிறீர்கள்? உட்காரலாம்!" என்று சகுந்தலா கூறினாள். திரும்பிப்பார்க்காமலே.

குலசேகரன் திடுக்கிட்டுப்போய், கட்டிலுக்குச் சற்று அருகிலிருந்த நாற்காலியில் உட்.

கார்ந்தான். அவள் மிக பலவீனமான நிலையில் படுக்கையில் இருக்கிறாள் என்பது தெரிந்தது.

"நீங்கள் சிறிதும் எதிர்பார்க்கவில்லையல்லவா?" என்று சகுந்தலா திரும்பிப்பார்த்துக் கேட்டாள். அவள் எதைக்குறிப்பிடுகிறாளென்று அவனுக்குத் தெரியவில்லை.

"டாக்டர் சஞ்சீவி இருக்கிறாராவென்று பார்க்க, நான் வந்தேன். உங்களுடைய உடல் நலம் எப்படியிருக்கிறது?" சத்தற்ற கேள்வியைக் குலசேகரன் கேட்டான்.

"டாக்டர் வருவதற்கு நாழியாகும். ஏதாவது சொல்லவேண்டுமா?"

"நான் வெளியூர் போகிறேன். இன்னும் பத்து நாள் கழித்து வருவேன் என்று சொன்னால் போதும்" குரலைச் சற்றுக் கடுமையாக வைத்துக்கொண்டே அவன் சொன்னான்.

"சரி! நீங்கள் போவதற்குமுன், இதை திரும்ப எடுத்துக்கொண்டு போய்விடுங்கள்" சகுந்தலா தன் தலையணைக்குக் கீழ் இருந்த காகிதத் துண்டை எடுத்துக்கொடுத்தாள்.

முதலில் அவன் எழுதி அனுப்பிய சிறு கடிதம்! அது கசங்கி மிகவும் அழுக்கடைந்திருந்தது, காகிதம் மட்டுமென்ன? அதிலடங்கியிருந்த கருத்துக்கூட, கசங்கி மாசுபடிந்து விட்டது.

"நன்றி!" என்று அலட்சியத்துடன் குலசேகரன் கடிதத்தைத் தன் பையில் போட்டுக்கொண்டான். கடைசியாக ஒரு பாரம் நீங்கியதுபோலிருந்தது.

சிறிதுநேரம் இருவரும் பேசாமலிருந்தார்கள். முன்பின் தெரியாத—ஒருவருக்கொருவர் அறிமுகமாகாத இருவர் உட்கார்ந்திருப்பது போலிருந்தது. மிகச் சோர்வுடன், பலமற்று, சற்றுச் சிரமத்துடன் மூச்சுவிட்டபடி சகுந்தலா படுத்திருந்தாள். அவளுடைய பலவீன நிலையைப் பார்க்கும்பொழுது, குலசேகரனுக்கு முதலில் உண்டான கோபம் மறைந்து, அவளிடம் பரிதாபம் உண்டானது.

"அந்தக் கடிதத்தை அன்றே திருப்பியனுப்பிவிட எண்ணினேன். மறுபடியும் பார்க்கமுடியாததால், தரமுடியவில்லை. அந்தக் கடிதம்—அதைப் பெற எனக்குச் சிறிதும் அருகதையில்லை. எனக்கு நன்றாகத் தெரியும், கடைசித் தடவையாக என்து நன்றி, நீங்கள் செய்தவைகளுக்கு! நீங்கள் திரும்பி வருவதற்குள் நான் பிழைத்திருந்தாலும் இருப்பே[ன்] இறந்துபோனாலும் போவேன், ஒ[ன்றும்] சொல்லமுடியாது."

(தொ[டரும்])

நோபல் பரிசு

"நோபல்பரிசு பெற்றவர்" என்று [ய]ாரையும் குறிப்பிட்டால், அவர் போற்றிப் பாரா[ட்டி] மதிக்கத்தக்கவராவார் என்று கொள்கி[றோம்].

'நோபல் பரிசு' என்பது நோபல் என்[பவ]ரின் பெயரால் அமைந்த பரிசு எ[ன்று] பொருள்படும். அந்தப் பரிசை ஏற்படு[த்தி]வர் அவர்தான். அவர் முழுப்பெயர் [ஆல்]பெர்டு பி. நோபல் என்பதாகும். அவர் [சுவீ]டன் நாட்டைச் சேர்ந்த கலவையியல் [வல்லு]ஞர் (Chemist) ஆவார். 'கன்காட்டன்' ([Gun] Cotton) என்ற டைனமைட்டை அவர் கண்டுபிடித்தார். அதன்மூலம் அவ[ருக்கு] ஏராளமான செல்வம் சேர்ந்தது. தம[க்குச்] சேர்ந்த செல்வத்தையெல்லாம் மு[தலாக] வைத்து, அதிலிருந்து கிடைக்கும் வ[ட்டித்] தொகைகளைக் கொண்டு, உலகில் த[னித்] தனித் துறைகளில் பேரறிவுத்திறனும், [வல்]லாற்றலும், பெரும்புகழும் வாய்ந்த சான்[றோர்]களில் சிறந்தவர்கள் என்று, ஆண்[டுக்கு] ஆண்டு தேர்ந்தெடுக்கப்படுவோர்க்குப் [பரிசு] வழங்கவேண்டும் என்று அவர் ஒரு உ[யில்] ஏற்படுத்தினார். அந்தப் பரிசுதான் 'நோ[பல்] பரிசு' என்று பெயர்பெறுகிறது.

கலவையியல், இயற்கைப் பொருளி[யல்] மருத்துவவியல், உடற்கூறியல். இலக்[கிய]வியல், அமைதிக்குப் பாடுபடுதல் ஆ[கிய] துறைகளில் அந்தந்த ஆண்டில் பேர்[பெற்]றோர்க்கு நோபல் பரிசு வழங்கப்பெறுகி[றது]. பரிசின் தொகை சற்றேறக்குறைய [ரூ.] 1,00,000 ஆகும்.

கலவையியல், இயற்கைப் பொருளி[யல்] ஆகிய துறைகளில் பரிசிற்குரியவர்க[ளைச்] சுவீடன் அறிவியற்கழகம் (Sweedish Acad[emy] of Sciences) தேர்ந்தெடுக்கிறது. மருத்[துவ]வியல், உடற்கூறியல் ஆகிய துறைக[ளில்] பரிசிற்குரியவர்களை இசுடாக்கோமி[லுள்ள] கரோலைன் மருத்துவ அமைப்பு (Co[roline] Medical Institute) தேர்ந்தெடுக்கி[றது]. இலக்கிய வல்லுநர்களைச் சுவீடன் அரச[க் க]ழகமும்(Sweedish Royal Academy), அமை[திக்]குப் பாடுபடுபவர்களை நார்வே பாராளு[மன்ற]மும் (Norwegian Parliament) தேர்ந்தெ[டுக்]கின்றன.

க்கும்—தெற்கும்

நெசவு ஆலைகள்

அவரவர் தேவையை அவரவரே நிறை ற்றிக்கொள்ளவேண்டும், பொறித்தொழி மூலம் உற்பத்தியாகும் பொருள்களைப் ற்றக்கூடாது, குடிசைத்தொழிலின் மூலம் பத்தியாகும்பொருள்களையே பேணிவளர்க் வண்டும், பொறித்தொழில்மயமான நகர ழ்க்கையைவிடக் குடிசைத்தொழில்மய சிற்றூர் வாழ்க்கையே மேலானது, வை காந்திய நெறிமுறையிலமைந்த வாழ்க் க்குறிக்கோள்களாகும் என்றெல்லாம் காங் சுக்காரர்கள் அடிக்கடி வற்புறுத்திக் கூறி கின்றனர்.

வளர்ந்திருக்கும் குடிசைத்தொழில்களை வாழ்வோரின் வாழ்க்கைப் பாழ்படும் வுக்குப் பொறித்தொழில்கள் போட்டி டுகின்றன, குடிசைத் தொழில்களை நம்பி வோரின் வாழ்நாள் வரையிலுமாவது தொழில்களுக்குப் போட்டி ஏற்படாமல் த்து, அத்தொழில்களை அவர்களுக்குக் பாற்றிக்கொடுக்க வேண்டும் என்று கூறி அதில் ஓரளவுக்குப் பொருள் இருக்கமுடி ஆனால் வளர்ந்திருக்காத குடிசைத் ழிலைப் பொறித்தொழிலுக்குப் போட்டி வளர்த்து, அதனைக் காப்பாற்றவேண் என்று கருதுகின்றனர் காங்கிரசுக்காரர் அத்தகைய முயற்சிகளிலே ஒன்றுதான் இதற்குக் காரணம் பொறித்தொழிலின் தேவையற்ற ஒரு வெறுப்பையும், குடி த்தொழிலின்மீது தேவையற்ற ஒரு விருப் தையும்கொண்டு, அவைகளைத் தங்கள் த்திலேயே வளர்த்து வைத்துக்கொண் பதுதான். ஆனால் நடைமுறையில் இந் கருத்துக்களுக்கு நேர் மாறான செயல்கள் நடைபெறுகின்றன; குடிசைத்தொழில் வளருவதில்லை, பொறித்தொழில்கள் தாம் ருகின்றன. "குடிசைத் தொழிலை வளர்க்க ண்டும்; பொறித்தொழிலை ஒதுக்கவேண் என்ற காந்தியாரின் கொள்கை, எப்ப தென்னாடு தாழ்ந்த நிலையில் என்றென் இருப்பதற்குக் காரணமாகிவிட்டது. தியார் விதைத்த அந்த விதைகளை வட ார் பல காலத்திற்கு முன்பே பட்டுப் தம்படிச் செய்துவிட்டனர்; ஆனால் தென் வரோ தேவையற்ற நிலையிலும் அவற் பேணி வளர்த்துவருகின்றனர்.

எந்த வடநாட்டில், அதுவும் எந்த மாநிலத் தில் காந்தியார் தோன்றினாரோ, எங்கு அதிக மான உபதேசங்களைப் புரிந்தாரோ, எங்கு அதிகக் காலம் பாடுபட்டாரோ, எங்கு அதிக மாகச் சொந்தக்காரர்களைக் கொண்டிருந் தாரோ, அந்தப் பம்பாய் மாநிலத்தில்தான் நெசவு ஆலைகள் ஏராளமாக இருக்கின்றன. அங்குப் பெருகியது கதர் உற்பத்தியல்ல; நெசவுதான்!

நெசவு ஆலைகளை எடுத்துக்கொண்டால் வடநாடு ஏற்றம் பெறவும், தென்னாடு மிகத் தாழ்ந்து வடநாட்டிற்குச் சந்தைக்கூடமாக விளங்கவும் ஆன நிலைமையில்தான் அவைகள் அமைந்திருக்கின்றன. கீழே காட்டப்பெறும் புள்ளி விபரங்கள் அந்த உண்மையைத் தெளி வாக்கிக்காட்டும்.

பட்டு—பருத்தி நெசவு ஆலைகள்

	ஆலைகளின் எண்ணிக்கை	கதிர்களின் எண்ணிக்கை	தறிகளின் எண்ணிக்கை
வடநாட்டில்	332	88,96,479	1,86,841
தென்னாட்டில்	121	25,30,555	16.945

தென்னாட்டைக் காட்டிலும் வடநாட்டில் சுமார் 10 மடங்கு மிகவான நெசவுத்தறிகள் இருக்கின்றன என்பதிலிருந்தே, எவ்வளவு மிகவான ஆலைத்துணிகள் தென்னாட்டில் இறக்குமதி செய்யப்படும் என்பதை ஒருவாறு ஊகித்தறிந்துகொள்ளலாம்.

திராவிடம் தனிநாடாக ஆக்கப்படுமே யானால், வடநாட்டுப் போட்டிகளைத் தடுத்து நிறுத்தலாம், இப்பொழுது கைத்தறிகளை நம்பி வாழும் பெரும்பாலான மக்களுக்குப் பாதுகாப்பு அளிக்கலாம், தேவையான அளவு ஆலைகளை நம் விருப்பத்திற்கேற்ப இங்கேயே ஏற்படுத்திக்கொள்ளலாம்! அப்பொழுது திராவிடம் தன் தேவையை நிறைவேற்றிக் கொள்வதாகவும் இருக்கும்; வெளிநாடுகளுக்கு நூல், துணி ஏற்றுமதி செய்வதாகவும் இருக் கும்! பருத்தி, மின்சாரம், இரும்பு, மனித உழைப்பு இவற்றைப் பெறுவதற்கான வசதி கள் திராவிடத்திலேயே இருக்கின்றன! ●

ஆல்பர்ட் ஐன்சுடைன்

இயற்கையில் புதைந்துகிடக்கும் அரிய பல உண்மைகளைக் கண்டறிந்து, அதன் மூலம் மனித சமுதாய வளர்ச்சியைப் பெருக்கிய அறிவியல் அறிஞர்களில், சென்ற திங்கள் மறைந்த பேரறிஞர் ஆல்பர்ட் ஐன்சுடைன் ஒருவராவார். அவரது மறைவு அறிவியல் உலகிற்கே பேரிழப்பாகும்.

"உலகத்தை உருவாக்கிய எண்மரில் இவரும் ஒருவர்" என்று பர்னாட்சா ஐன்சுடைனைப்பற்றிக் கூறியதற்கேற்ப, "அணு இயக்கத்தின் தந்தை" என்று ஐன்சுடைனை அழைக்கலாம். அவர் கண்ட முடிவுகளை அடிப்படையாகக் கொண்டுதான் இன்று அணு ஆராய்ச்சிகள் நடத்தப்படுகின்றன.

ஐன்சுடைன் 1879-ம் ஆண்டு மார்ச் 14-ம் நாள் செர்மானியில் யூதப் பெற்றோர்களுக்கு மகனாகப் பிறந்தார். ஏழ்மையிலே வளர்ந்தார்; ஏழமையிலேயே கற்றுத் தேர்ந்தார். அவரது ரிலேடிவிட்டிக் கோள்கை (The Theory of Relativity) வெளியிடப்பட்டபோது அவருக்கு வயது இருபத்தாறுதான். அப்போது அவர் ஒரு சாதாரணக் குமாஸ்தாவாகப் பணியாற்றிவந்தார். இந்தக் கண்டுபிடிப்பு அவருக்கு 'டாக்டர்' என்ற பட்டத்தையும் சூரிச் பல்கலைக் கழகத்தின் பேராசிரியர் வேலையையும் தேடித் தந்தது.

ஐன்சுடைனின் ரிலேடிவிட்டிக் கொள்கை சரியான நிலையை அடையப் பத்துஆண்டுகள் ஆகியது. ஆனால் முதல் உலக மகாயுத்தம் ஆரம்பமாகவே ஐன்சுடைனைப் பற்றியும் அவரது புதிய கொள்கை பற்றியும் மற்ற நாடுகள் அறிய வாய்ப்பில்லாமல் இருந்தது. 1919-ம் ஆண்டு பெர்லின் செய்தித்தாள் ஒன்று ஐன்சுடைனின் புகைப்படத்துடன் அவரது புதிய கொள்கையை வெளியிட்டது. ஐன்சுடைனைப் பற்றி எங்கும் பேசப்பட்டு, அவரது கொள்கைகளை அயல்நாடுகளும் அறிந்தன. பலநாடுகளிலிருந்தும் ஐன்சுடைனுக்கு அழைப்புகள் வந்தன. அவைகளை ஏற்றுப் பலநாடுகளும் சுற்றித் தனது கொள்கைகளை விளக்கி எல்லோருடைய பாராட்டுதலையும் பெற்றார்.

செர்மானி திரும்பிய ஐன்சுடைன் மேலும் தனது ஆராய்ச்சிகளைத் தொடங்கினார். ஆனால் அவருடைய அமைதியான வாழ்வு வெகுகாலத்திற்கு நீடிக்கவில்லை. 1933-ல் ஏற்பட்ட நாசிசக் கொள்கை—யூத எதிர்ப்புக் கொள்கை—அவரைச் செர்மானியிலிருந்து விரட்டியடித்தது. உலகம் போற்றும் மேதை ஒரு நாடோடியாக மாறநேர்ந்தது. அமெரிக்காவில் குடியேறி அங்கு பிரின்சுடன் கழகத்தில் பேராசிரியராக அமர்ந்து தனது இறுதிநாள் வரை அமெரிக்கராகவே வாழ்ந்தார்.

ஐன்சுடைன் உலக சமாதானத்தில் மிகுந்த பற்றுக்கொண்டவர். பாண்டுங்கில் நடை பெற்ற மாநாட்டிற்குக்கூட தனது வாழ்த்தை அனுப்பிக்க அவர் தவறவில்லை. மதக் கருத்துக்களிலே பினோசாவின கருத்துக்களையே அவர் போற்றினார். சமூகத்தின்பேரால் இழைக்கப்படும் பலவித கொடுமைகளைக் கண்டித்தார்.

டாக்டர் ஆல்பர்ட் ஐன்சுடைன் சென்ற ஏப்ரல் திங்கள் 18-ம் நாள் தமது 76-வது வயதில் இயற்கையெய்தினார். அவரது வேண்டுகோளுக்கிணங்க, உடலின் சில முக்கிய பாகங்கள் எடுக்கப்பட்டபின் அவரது உடல் எரிக்கப்பட்டது. எரிக்கப்படுவதற்குமுன் எந்தவிதச் சடங்குகளும் செய்யப்படவில்லை; அவரது உடலிலிருந்து எடுக்கப்பட்ட முக்கியப் பகுதிகள் மருத்துவ ஆராய்ச்சியில் பயன்படுத்துவதற்காகவும், அவரது மூளை நியூயார்க் நகரிலுள்ள ஒரு மருத்துவமனைக்கும் அனுப்பப்பட்டன.

இதிலிருந்து மனிதனது இறப்பு பற்றி அவர் கொண்டிருந்த பகுத்தறிவுக் கருத்துக்கள் நன்கு புலனாகின்றன.

இதுவரை தோன்றிய சமுதாயச் சிற்பிகளில் தலைசிறந்து விளங்குபவர் ஐன்சுடைனாவார். வாழ்க அவரது புகழ்! வளர்க அவரது கருத்துக்கள்!!

ரொட்டிக்காரன் மகன்

முன்பொரு காலத்தில் கிரேக்க நாட்டில் லிப் என்ற மன்னன் வாழ்ந்தான். அவன் ரு சமயம் எல்லோராலும் பாராட்டப்பெற்ற, யதில் முதிர்ந்த கிரேக்க அறிஞர் ஒருவரை தோ ஒரு குற்றம் செய்தமைக்காகத் தண் த்துச் சிறையில் அடைத்துவைத்தான்.

ஒரு நாள் பிலிப் மன்னனுக்கு ஸ்பெயின் ட்டு மன்னனிடமிருந்து அன்பளிப்பாக ஒரு ரிய அழகிய குதிரை வந்து சேர்ந்தது. திரையின் உண்மையான மதிப்பையும் சிறப் பயும் அறியவேண்டி, மன்னன் குதிரை ருக்கு லாடம் அடிக்கும் ஒருவனை அழைத்து ஆள் அனுப்பினார். அவன் வந்து குதிரை யப் பார்த்துவிட்டு, தன்னால் குதிரையைப் ற்றித் திட்டமாக எதையும் கூறமுடியவில்லை ன்றும், சிறையிலிருக்கும் கிரேக்க அறிஞர் ற்றறிந்தவர் என்றும், அவரை அழைத்துக் ட்டால் குதிரையின் சிறப்பு தெரியக்கூடும் ன்றும் சொன்னான்.

மன்னன் குதிரையை அரண்மனை மைதா த்தில் விடச்சொல்லிவிட்டு சிறைக்கூடத்தி லிருந்து அறிஞரை அழைத்துவரக் கட்டளை யிட்டான். காவலாளிகள் அறிஞரை அழைத்துவந்து மன்னன்முன் நிறுத்தினர்.

" அறிஞரே! வாருங்கள். உங்கள் அறி வாண்மையைப்பற்றி அதிகம் கேள்விப்பட் டேன். எங்கே! இந்தக் குதிரையைப் பற்றித் தங்கள் கருத்தென்ன என்பதைக் கூறுங்கள் பார்க்கலாம்" என்று மன்னன் கூறினான்.

அந்த அறிஞர் குதிரையை நன்கு பரிசோ தித்துவிட்டு " அரசே! இக்குதிரை உண் மையில் ஒரு அழகான சண்டைக்குதிரை. ஆனால் இது கழுதைப்பால்கொண்டு வளர்க் கப்பட்டிருக்கிறது என்று நான் கருது கிறேன்" என்றார்.

மன்னன் உடனே தனது ஆட்களை ஸ்பெயின் நாட்டுக்கு அனுப்பி அறிஞர் கூறியது உண் மையா என்று அறிந்துவரச் சொன்னான். அவர்கள் திரும்பிவந்து, தாய்க்குதிரை குட் டியை ஈன்றதும் இறந்துவிட்டதென்றும் அதன்பின் குட்டியைக் கழுதைப்பால்கொண்டு தான் வளர்த்திருக்கிறார்கள் என்றும் கூறி னர். அதுகேட்டு ஆச்சர்யமடைந்த மன்னன், அறிஞருக்குப் பரிசாகத் தினந்தோறும் பாதி ரொட்டித்துண்டு வழங்கிவருமாறு கட்டளை யிட்டான்.

பிறிதொருநாள் மன்னன் தனது நகைப் பெட்டியிலுள்ள, வைரம் மாணிக்கம் போன்ற கற்களைப் பார்வையிட்டுக்கொண்டிருக்கும் பொழுது, சிறையிலிருந்து அறிஞரை அழைத்துவரச்சொல்லி, அவரைப் பார்த்து, " எமது அறிஞரே! தாங்கள் அறிவிற்சிறந்த வர். எல்லாவற்றையும் தாங்கள் அறிந்திருப் பதாகத் தெரிகிறது. உங்களால் இந்தக் கற் களின் சிறப்பை எடுத்துக்கூறமுடியுமா? இவைகளில் எது அதிக மதிப்புடையவை?" என்று கேட்டான்.

" அரசே! தாங்கள் எதை விலையுயர்ந்த தாகக் கருதுகிறீர்கள்?"

" இதுதான் அறிஞரே! எனக்கு அழகுள்ள தாயும் அதிக மதிப்புள்ளதாயும் தோன்று கிறது."

மன்னன் நகைப்பெட்டியிலிருந்து ஒரு கல்லை எடுத்தான். அதை வாங்கிப் பார்த்த அறிஞர்

ஐன்ஸ்டைனின்

முதல் முயற்சி!

ஐன்ஸ்டைன் தனது 16-வது வயதில் சூரிச் ல்கலைக் கழகத்தில் மாணவராகச சேரமுயன் ர். ஆனால் அவர் பள்ளிப்படிப்பை முடிக்காமல் றுத்திவிட்டதால், மெட்ரிகுலேசன் பரீட்சை ல் தேர்வு பெற்றால்தான் பல்கலைக் கழகத்தில் ாணவராகமுடியும் என்ற நிலை எற்பட்டது. தனால் ஐன்ஸ்டைன் மெட்ரிகுலேசன் பரிட் சையை எழுத நேர்ந்தது. ஆனால் பரிட்சையில் வர் தேறவில்லை! கணக்கிலும், இயக்க நூலி ம் (Physics) நன்றாகத் தேர்ச்சிபெற்றிருந்த வருக்கு மொழிப்பாடங்களிலும், பொது ஞ்ஞானத்திலும் தேர்ச்சி இல்லாததால் அவர் தால்வி கண்டார். வேறு வழியின்றிக் கடைசி ல் ஆரோ நகரிலுள்ள ஒரு பள்ளியில் சேர்ந்து யிற்சிபெற்று அதற்கடுத்த ஆண்டில் மெட்ரி லேசன் பரிட்சையில் தேறி சூரிச் பல்கலைக் ழகத்தில் மாணவராகச் சேர்ந்தார்.

உள்ளங்கையில் வைத்துத் தேய்த்துத் தனது காதருகில் வைத்தார். பின், "அரசே! இந்தக் கல்லுக்குள் ஒரு உயிருள்ள புழு இருப்பதாகத் தெரிகிறது" என்றார்.

மன்னன் வைரம் இழைப்பவனைக் கூப்பிட்டு அந்தக் கல்லை உடைத்துப் பார்க்கச் சொன்னான். அவர்களெல்லோரும் திடுக்கிடும்படியாக, ஒரு புழு கல் உடைக்கப்பட்டபோது வெளி வந்தது. வியத்தகு அறிவுடைய மனிதன் இந்த அறிஞர் என்று கண்ட மன்னன் அவருக்குத் தினமும் ஒரு முழு ரொட்டித்துண்டு வழங்கிவருமாறு கட்டளையிட்டான்.

இதற்குப்பின் சிறிது நாட்களுக்குள் மற்றொரு நிகழ்ச்சி ஏற்பட்டது. மன்னன் நேர்மையான அரசவழியில் பிறந்தவனல்ல என்ற வதந்தி நாட்டில் உலவ ஆரம்பித்தது. இச்செய்தி மன்னனுக்கு எட்டியது. அவனுக்கு ஒரே வழிதான் தோன்றியது. சிறையிலிருந்து அறிஞரை அழைத்துவரச்சொன்னான், அவர் வந்ததும் மன்னன் அவரைத் தன்னருகே அழைத்து, "அறிஞரே! தாங்கள் ஆய்ந்தறியும் திறன் பெற்றவர். நான் கேட்ட கேள்விகளுக்கு தாங்கள் அளித்த பதில்களே அதை வெளியாக்கிற்று, இப்பொழுது நான் யாருடைய மகன் என்பதைத் தாங்கள் அறிவிக்க விரும்புகிறேன்" என்றான்.

"அரசே! என்ன, விந்தையான கேள்வி இது! தாங்கள், இதற்குமுன் அரசபதவியிலிருந்தவரின் மகன் என்பது தங்களுக்கே தெரியுமே!"

"எனது கேள்விக்கு, மழுப்பாமல் உண்மையான பதிலைத் தெளிவாகக் கூறவேண்டும். தயங்கினால் ஒரு துரோகியைப்போல் இப்பொழுதே தாங்கள் இறக்க நேரிடும்."

"சரி......அரசே! தாங்கள்......தாங்கள் ஒரு ரொட்டிக்காரனின் மகன் என்பதைத்தான் நான் கூறவேண்டியிருக்கிறது!"

மன்னன் தனது தாயைக் கைதுசெய்து அழைத்துவரும்படிக் கூறினான். அவர்கள் செய்த கொடுமைகளினால் மன்னனின் தாய் அறிஞர் கூறியதை உண்மையென ஒப்புக்கொள்ளவேண்டியிருந்தது.

மன்னன் தனது தனியறைக்கு அறிஞரை அழைத்துச்சென்று அவரிடம், "எமது அறிஞரே! தங்களுடைய அறிவாண்மைக்கு நேரடியான ஆதாரங்கள் எனக்குக் கிடைத்தன. ஆனால் இவைபற்றிய அறிவைத் தாங்கள் எவ்வாறு பெற்றீர்கள் என்பதை எனக்குத் தெரிவிக்கவேண்டுகிறேன்" என்றான்.

"அரசே! இதோ சொல்கிறேன். குதிரை, கழுதைப்பால்கொண்டு வளர்க்கப்பட்டது என்று நான் கூறியது அதன் தொங்கும் காதுகளைக்கண்டுதான். குதிரைக்கு இயற்கையாகக் காதுகள் தொங்காது. இரண்டாவதாக நகைப்பெட்டியிலிருந்த கல்லில் புழு இருக்கிறது என்று நான் கூறியது, அந்தக்கல் சூடாக இருந்ததைக் கண்டு. இயற்கையாக இத்தகையக் கற்கள் தொடுவதற்குக் குளிர்ச்சியாக இருக்கும், ஆனால் அந்தக் கல் மட்டும் சூடாக இருந்ததாலும், வெப்பம் உயிருள்ள பிராணிகளிடமிருந்தே பரவும் என்று அறிந்திருந்ததாலும் அதற்குள் புழு இருக்கிறது என்று தீர்மானித்தேன்."

"சரி, நான் ஒரு ரொட்டிக்காரனின் மகன் என்பதை எவ்வாறு கண்டுபிடித்தீர்கள்."

"அது எப்படி என்றால். குதிரையைப்பற்றி நான் வியத்தகு உண்மையைக் கூறியபோது எனக்குப் பரிசாக தினமும் பாதி ரொட்டித்துண்டு அளிக்க கட்டளையிட்டீர்கள். பின்னும் கல்லிலுள்ள புழுவைப்பற்றித் தெரிவித்தபோது, எனக்குப் பரிசாக தினமும் ஒரு முழு ரொட்டித்துண்டு வழங்குமாறு கட்டளையிட்டீர்கள். இதன்பின்தான் தாங்கள் யாருடைய மகன் என்பதை என்னால் உணரமுடிந்தது. உண்மையில் நீங்கள் ஒரு அரசனின் மகனாக இருந்திருந்தால் எனது தகுதிக்கேற்ற வகையில் ஒரு நகரத்தையே பரிசாக அளித்திருக்கலாம். ஆனால் ஒரு ரொட்டிக்காரனின் மகன் செய்வதுபோல் உங்கள் இயல்பான மனநிலை எனக்கு ரொட்டித்துண்டையே பரிசாக அளிப்பதில் திருப்தியடைவதாக இருந்தது."

அறிஞர் இவ்வாறு கூறியதும் மன்னன் தனது இழிந்த நிலையை உணர்ந்து உடனே கிரேக்க அறிஞரை விடுதலை செய்து பெரு மதிப்புள்ள பரிசுகள் பல அவருக்கு வழங்கினான்.

[ஒரு இத்தாலியச் சிறுகதை.]

மறு பரிட்சை

[இரா. செழியன்]

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

ஹெட் : என்னப்பா! கேள்வி ஏதோ கேட்டால் பதில் ஏதோ சொல்லுகிறாய்! பாரதம்பாடிய பெருந்தேவனார் இயற்றியது எந்தநூல்? என்று அவர் கேட்கிறார்!

முத்து : அந்தக் கேள்வி அவர் கேட்கிறார், அதற்குப் பதில் "டாக்சி கார்" என்று நான் சொல்லுகிறேன். எப்படி?

[தமிழ் ஆசிரியர் கைவிரல்களை ஆட்டி ஏதோ பிரித்துக்கொண்டிருக்கிறார்.]

தமிழ் : மாணவன் சொன்ன பதில் மிகவும் சரி!

முத்து : எப்படி?

தமிழ் : 'டாக்சி கார்' என்றால் வாடகைக் கார் என்றுதான் அர்த்தம். வாடகை என்ற சொல் வாள், தகை என்ற இரண்டு சொற்கள் சேர்ந்து, மருவி, திரிந்து வந்ததாகும். வாள் தகை என்றால் வாளின் தன்மை என்று பொருள். வாளின் தன்மை என்ன? சண்டையிடுவது என்று நினைப்பீர்கள். அல்ல; பண்டைக்காலங்களில், பேனா இல்லாத காலத்தில் வாளை வைத்துதான் மரத்திலும், மரப்பட்டையிலும் எழுதிவந்தார்கள். வாளின் தன்மையில் எழுதுவதும் ஒன்றாகும். இங்கு பெரும்புலவர் ஒருவர் எழுதுவது என்றால் அது காவியமாகும். கவியென்பது பாட்டு எனவும், பா எனவும் வழங்கும் ஒரு பொருட்பல சொற்களாம். கார் என்பது அந்தக்காலத்திலும் இருந்தது. அந்தக் காலத்தில் அதை ரதம் என்று சொன்னார்கள். இப்பொழுதும் ரத வீதிக்கு கார் ஸ்டிரீட் என்று சொல்லுகிறோம். எனவே டாக்சி கார் என்றால், அதாவது வாடகைக் கார் என்றால், முன்பு காட்டியபடி பா ரதம் அதாவது பாரதம்! இந்தக் காலத்தில் எதை நாவல் என்று சொல்லுகிறோமோ அதைத்தான் அன்று இதிகாசமென்றும், புராணமென்றும் சொன்னார்கள்? எனவே மாணவன் அளித்த "டாக்சி கார் என்ற நாவல்" என்பது முற்றிலும் சரியான பதில்! தமிழ்ப் பரிட்சையில் மாணவன் தேர்ச்சியடைந்து விட்டான்.

[உட்காருகிறார்]

தலை : அடுத்தபடி, சரித்திரம்!

[இஸ்டரி ஏகாம்பரம் எழுந்துவருகிறார்]

முத்து : வாய்யா! கிழிந்தகோட் கில்ஜி மகமது! நீ போட்டிருக்கிற கோட், நான் இந்தப் பள்ளிக்கூடத்திற்குள் வருவதற்கு முன்னமே போட்டிருந்தே, நான் படிச்சு போனபின்னும் போட்டிருக்கிற! நாங்களெல்லாம் இந்த கோட் கில்ஜி மகமது காலத்தில் இந்தியாவுக்குள் வந்தது என்று சொல்வது! எங்க ஏகாம்பர வாத்தியார் சரித்திர பாடத்தை மட்டுமல்ல, சரித்திர சம்பந்தமான கோட்டையும்—ஒரு 500 அல்லது 1000 வருஷங்களுக்குமுன் இருந்திருக்கவேண்டிய கோட் அதையும் போட்டிருக்கிறார் என்று சொல்வோம். கிழிஞ்ச கோட் கில்ஜி மகாராஜா! எங்கே உங்கள் கேள்வியை ஆரம்பியுங்கள்!

இஸ்டரி : ஐரோப்பாவில் நடந்த நூறுண்டுப் போர் எவ்வளவுகாலம் நடந்தது?

முத்து : ஆ! கேள்வியும் பதிலையும் கொடுத்து என்னை ஏமாத்தலாம்னு பார்க்கிறீங்களா? இந்தத் தடவையும் ஏமாறமாட்டேன்! இருங்க! நூறுண்டுப்போர் 23மைல் தூரம் நடந்தது! ஹி, ஹி! எவ்வளவுகாலம் நடந்தது என்று கேட்டால், நான் எவ்வளவுதூரம் நடந்தது என்று பதில் தருகிறேன்!

இஸ்டரி : நான் சொல்லுகிற கேள்வியை நன்றாகக் கவனித்துப் பதில் சொல்! நூறுண்டுப் போர் எவ்வளவுகாலம் நடந்தது?

பதில் இருக்குன்னு கண்டுபிடிக்க முடியாது. ஆனால், இப்போ கேள்வியிலே [illegible] தருகிறுங்களே! இதுமாதிரி சுலபமான கேள்விகளை அந்தக்காலத்தில் கேட்டிருந்தால், உங்க ஒவ்வொருவருக்கும் ஒரு கோயில்கட்டி நாங்க கும்பிட்டிருக்கமாட்டோம்? சரி! கங்கை நதி உற்பத்தியாகிற இடத்தில் பெய்கிற மழைத்தண்ணீர் எந்த நதியில் விழுகிறது என்று கேட்டிங்களா! அது கூவம் நதியில் விழுகிறது! எப்படி என் பதில்! இமயமலையில் பெய்கிற மழை கூவம் நதியில் ஓடுகிறது என்றேன்! ஹெட் மாஸ்டர் சார், நான் 7 வருஷம் செலுத்தின பணத்தை ரெடியா வைத்துக்கொள்ளுங்க!

பூகோளம் : மாணவன் கொடுத்த பதில் சரியானதுதான்! பூகோளத்தை மிகவும் ஆழ்ந்து நன்ருகப் படித்திருக்கிருன் என்பது இந்தப் பதிலிலிருந்து தெரிகிறது! எப்படி யென்ருல்...எப்படியென்ருல்...... ஆமாம்! இமயமலையில் பெய்கிற தண்ணீர் கூவம் நதியில் விழுகிறது! எப்படி யென்ருல், இதோ! இமயமலையில் கங்கை நதி உற்பத்தியாகும் இடத்தில் பெய்கிற மழை, அந்தக் கங்கை மலையில் விழும் என்று சொல்லிவிடுவது மிகச் சுலபம். சாதாரணப் பூகோளப்பாடத்தை மட்டும் படிப்பவர்கள் அத்துடன் நின்றுவிடுவார்கள். நமது மாணவன் அதற்கு மேலும் பூகோள ஆராய்ச்சியில் வல்லவனுக இருக்கிருன், மழை நீர் கங்கையில் விழுகிறது, அதற்கப்புறம் என்ன ஆகிறது? கங்கை நதி வழியே வங்காள விரிகுடாவில் விழுகிறது. எல்லா நதிகளும் தண்ணீரைக் கொண்டுபோய் கடலில் கலக்கும். நமது சென்னையில் உள்ள பிரசித்திபெற்ற கூவம் நதியில் மட்டும் அடிக்கடி கடலில் இருந்து தண்ணீர் இதற்குள் பாய்ந்துவரும். ஆக என்ன ஆகிறது? இமயமலையில் பெய்த மழை நீர், கங்கை வழியே ஓடி, வங்காள விரிகுடாவில் விழுந்து: அங்கிருந்து அலை அலையாகக் கிளம்பி, சென்னைக் கடற்கரையில் பட்டு, கூவம் நதியில் செல்லுகிறது. இவ்வளவையும் உள்ளடக்கி, கங்கை நதி உற்பத்தியாகும் இடத்தில் விழுகிற மழை நீர் கூவம் நதியில் பாய்கிறது என்று மாணவன் பதில் சொன்னுன்!

தலைமை : அப்படியானுல் பூகோளத்தில் பையன் பாஸ்!

பூகோ : பாஸா? என்ன அப்படிக் கேட்கிறீங்க? கேள்விக்கு நாலு மார்க் என்றால், பையன் கொடுத்த பதிலுக்கு [illegible] மார்க் தரலாம்!

தலைமை : ஜியாகரபி பாஸ்! இனி கணக்கு ஒன்றுதான் பாக்கி. அதில் பாஸ் செய்துவிட்டால், பையனின் சர்டிபிகேட்டைத் திருப்பித் தந்துவிடலாம், இல்லையென்ருல் சம்பளப்பணத்தைத் திருப்பித்தர வேண்டும்!

முத்து: (அதைரியமடைந்தவனுய்) அப்படியா? கடைசிப் பரிட்சை! நான் மிகவும் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும்!

[கணக்கு வாத்தியார் எழுந்துவந்து பையனை ஏற இறங்கப் பார்க்கிருர்.]

முத்து : உங்களுக்கு என்ன பேர் தெரியுமில்ல! கத்தரிக்காய்! நீங்கள் தினந்தோறும் மார்க்கட்டுக்குப் போய் கத்தரிக்காய் வாங்கிக்கொண்டு வருகிறதை நாங்கள் பார்த்திருக்கிருேம். அதுவுமில்லாமல், ஏதாவது கணக்கு கொடுத்தால், அதில் கத்தரிக்காய் ஒருபலம் இன்ன விலை, ஒரு வீசை என்னவிலை. அப்படினு கத்தரிக்காய்தான் அங்கேயும் வரும்! சரி! கணக்கைக் கேளுங்க! என் கணக்குப் படிப்புதான் உங்களுக்குத் தெரியும்! எமகண்டம்தான்! நீங்கள் கேள்வி கேட்கிறதுக்கு முன்னுல், எனக்குத் தெரிந்த கணக்கைச் சொல்லட்டுமா? 2-ம் 2-ம் 7; 2-ம் 3-ம் 13; இப்படித்தான் பெருக்கல் வாய்ப்பாடு! 3 வாழைப்பழமும் ஐந்து மாம்பழமும் சேர்ந்து மொத்தம் எவ்வளவு பழங்களிருக்கின்றனவென்ருல், 23 பலாப்பழங்கள்! இது எல்லாம் என் கணக்கு வாய்ப்பாடு! இதற்கு முன் வைத்த பரிட்சையிலெல்லாம், எப்படியோ 'குல்மால்' பண்ணி, "சரியான பதில்" " புத்திசாலித்தனமான விடை" "100-க்கு 150 மார்க்" என்று சரிக்கட்டிவிட்டீர்கள்! இந்தக் கணக்கில் மட்டும், இந்தக் கத்தரிக்காயல்ல, பெரிய பலாக்காய் வந்தாலே என்னை அசைத்துக்கொள்ளமுடியாது! நீங்களும் கேள்விகேட்டு, நேரத்தை வீணுக்குவதற்குப் பதில், பெயில் போட்டு அனுப்பிவிடலாம்!

கண : இது கணக்கு, ரொம்பக் கவனமாய் இருக்கவேண்டும். வேடிக்கை பேசக் கூடாது. நான் இரண்டு கேள்விகளைக்

பதில் இருக்குன்னு கண்டுபிடிக்க முடியாது. ஆனால், இப்போ கேள்வியிலே பதிலை வச்சு, அல்வாத் துண்டுமாதிரித் தருகிறுங்களே! இதுமாதிரி சுலபமான கேள்விகளை அந்தக்காலத்தில் கேட்டிருந்தால், உங்க ஒவ்வொருவருக்கும் ஒரு கோயில்கட்டி நாங்க கும்பிட்டிருக்கமாட்டோம்? சரி! கங்கை நதி உற்பத்தியாகிற இடத்தில் பெய்கிற மழைத்தண்ணீர் எந்த நதியில் விழுகிறது என்று கேட்டிங்களா! அது கூவம் நதியில் விழுகிறது! எப்படி என் பதில்! இமயமலையில் பெய்கிற மழை கூவம் நதியில் ஓடுகிறது என்றேன்! ஹெட் மாஸ்டர் சார், நான் 7 வருஷம் செலுத்தின பணத்தை ரெடியா வைத்துக்கொள்ளுங்க!

பூகோளம் : மாணவன் கொடுத்த பதில் சரியானதுதான்! பூகோளத்தை மிகவும் ஆழ்ந்து நன்ருகப் படித்திருக்கிருன் என்பது இந்தப் பதிலிலிருந்து தெரிகிறது! எப்படி யென்ருல்...எப்படியென்ருல்...... ஆமாம்! இமயமலையில் பெய்கிற தண்ணீர் கூவம் நதியில் விழுகிறது! எப்படியென்ருல், இதோ! இமயமலையில் கங்கை நதி உற்பத்தியாகும் இடத்தில் பெய்கிற மழை, அந்தக் கங்கை மலையில் விழும் என்று சொல்லிவிடுவது மிகச் சுலபம். சாதாரணப் பூகோளப்பாடத்தை மட்டும் படிப்பவர்கள் அத்துடன் நின்றுவிடுவார்கள். நமது மாணவன் அதற்கு மேலும் பூகோள ஆராய்ச்சியில் வல்லவனுக இருக்கிருன், மழை நீர் கங்கையில் விழுகிறது, அதற்கப்புறம் என்ன ஆகிறது? கங்கை நதி வழியே வங்காள விரிகுடாவில் விழுகிறது. எல்லா நதிகளும் தண்ணீரைக் கொண்டுபோய் கடலில் கலக்கும். நமது சென்னையில் உள்ள பிரசித்திபெற்ற கூவம் நதியில் மட்டும் அடிக்கடி கடலில் இருந்து தண்ணீர் இதற்குள் பாய்ந்துவரும். ஆக என்ன ஆகிறது? இமயமலையில் பெய்த மழை நீர், கங்கை வழியே ஓடி, வங்காள விரிகுடாவில் விழுந்து; அங்கிருந்து அலை அலையாகக் கிளம்பி, சென்னைக் கடற்கரையில் பட்டு, கூவம் நதியில் செல்லுகிறது. இவ்வளவையும் உள்ளடக்கி, கங்கை நதி உற்பத்தியாகும் இடத்தில் விழுகிற மழை நீர் கூவம் நதியில் பாய்கிறது என்று மாணவன் பதில் சொன்னுன்!

தலைமை : அப்படியானுல் பூகோளத்தில் பையன் பாஸ்!

பூகோ : பாஸா? என்ன அப்படிக் கேட்கிறீங்க? கேள்விக்கு நூறு மார்க் என்றால், பையன் கொடுத்தப் பதிலுக்கு நூற்றைம்பது மார்க் தரலாம்!

தலைமை : ஜியாகரபி பாஸ்! இனி கணக்கு ஒன்றுதான் பாக்கி. அதில் பாஸ் செய்துவிட்டால், பையனின் சர்டிபிகேட்டைத் திருப்பித் தந்துவிடலாம், இல்லையென்ருல் சம்பளப்பணத்தைத் திருப்பித்தர வேண்டும்!

முத்து: (அதைரியமடைந்தவனுய்) அப்படியா? கடைசிப் பரிட்சை! நான் மிகவும் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும்!

[கணக்கு வாத்தியார் எழுந்துவந்து பையனை ஏற இறங்கப் பார்க்கிருர்.]

முத்து : உங்களுக்கு என்ன பேர் தெரியுமில்ல! கத்தரிக்காய்! நீங்கள் தினந்தோறும் மார்க்கட்டுக்குப் போய் கத்தரிக்காய் வாங்கிக்கொண்டு வருகிறதை நாங்கள் பார்த்திருக்கிரும். அதுவுமில்லாமல், ஏதாவது கணக்கு கொடுத்தால், அதில் கத்தரிக்காய் ஒருபலம் இன்ன விலை, ஒரு வீசை என்னவிலை. அப்படின்னு கத்தரிக்காய்தான் அங்கேயும் வரும்! சரி! கணக்கைக் கேளுங்க! என் கணக்குப் படிப்புதான் உங்களுக்குத் தெரியும்! எமகண்டம்தான்! நீங்கள் கேள்வி கேட்கிறதுக்கு முன்னுல், எனக்குத் தெரிந்த கணக்கைச் சொல்லட்டுமா? 2-ம் 2-ம் 7; 2-ம் 3-ம் 13; இப்படித்தான் பெருக்கல் வாய்ப்பாடு! 3 வாழைப்பழமும் ஐந்து மாம்பழமும் சேர்ந்து மொத்தம் எவ்வளவு பழங்களிருக்கின்றனவென்ருல், 23 பலாப்பழங்கள்! இது எல்லாம் என் கணக்கு வாய்ப்பாடு! இதற்கு முன் வைத்த பரிட்சையிலெல்லாம், எப்படியோ 'குல்மால்' பண்ணி, "சரியான பதில்" "புத்திசாலித்தனமான விடை" "100-க்கு 150 மார்க்" என்று சரிக்கட்டிவிட்டீர்கள்! இந்தக் கணக்கில் மட்டும், இந்தக் கத்தரிக்காயல்ல, பெரிய பலாக்காய் வந்தாலே என்னை அசைத்துக்கொள்ளமுடியாது! நீங்களும் கேள்விகேட்டு, நேரத்தை வீணுக்குவதற்குப் பதில், பெயில் போட்டு அனுப்பிவிடலாம்!

க்ண : இது கணக்கு, ரொம்பக் கவனமாய் இருக்கவேண்டும். வேடிக்கை பேசக்கூடாது. நான் இரண்டு கேள்விகளைக்

பாரத்திலிருந்து, 6-வது பாரம்வரை 4—12—0 மாதச் சம்பளம். ஏப்ரல், மே, இரண்டு மாதத்தைத் தவிர மற்ற பத்து மாதம் சம்பளம் கட்டணும். என்ன ஆச்சுது, ஐந்தாவது கிளாசில் 23—12—0, 1-வதிலிருந்து மூன்ருவதுவரை 105-0-0 4-வது பாரத்திலிருந்து 6-வது பாரம் வரை 142—8—0. மொத்தம் 271—4—0 மேற்கொண்டு லைப்ரரி பீஸ் வருஷத்துக்கு ஒரு ரூபாய், கேம்ப் 1—4—0, அசோசியேஷன் 1—0—0, ஏழு வருஷத்துக்கும் 22—12—0. கடைசி மூன்று வருஷம், லைபாரடரி பீசுன்னு 4—8—0 கட்டினேன். இதையல்லாமல் எக்சாமினேஷன் பீஸ் 15 ரூபாய்! நோட்புக், புத்தகங்கள் வாங்கினது 203—8—0 இரண்டு தடவை எக்ஸ்கர்ஷன் அழைத்துக் கொண்டுபோனதுக்கு. 5 ரூபாய் 5 ரூபாய் கட்டினேன். ஆனல் உண்மையாகச் செலவானது 4—6—0, 4—3—0 அதில் பாக்கி 1—7—0 ஆக மொத்தம் எனக்குச் சேர வேண்டிய பணம் மொத்தம் ரூ.518—7—0 அதில் ஏழணுவைத்தள்ளிக்கொண்டு, பாக்கி 518 ரூபாயைக் கொடுத்தால் போதும்!

கண : சரியாக அவ்வளவுதானு?

முத்து : சரியாக! கொஞ்சங்கூடப் பிசகில்லே!

கணக் : கொஞ்சங்கூடப் பிசகில்லே. சிறு கூட்டல் கழித்தல் வரைச் சரியாக இருக்கிறது. [கையைக் கொடுக்கிருர்] கங்கராஜுலேஷன், முத்து! கணக்குப் பரிட்சையில் நீ பாஸ் செய்துவிட்டாய்!

முத்து : என்ன? என்ன?

கண : நான் இரண்டு கணக்குகள் தருவதாகச் சொன்னேன். சுலபமானது, கடினமானது! முதல் கேள்விக்குச் சிறு தவறில் விடை தப்பாகிவிட்டது! 7 வருஷத்தில் செலுத்திய மொத்தப் பணம் எவ்வளவு என்பது என்னுடைய இரண்டாவது கடினமான கேள்வி! மாணவன் கடினமான கேள்வியை மிகச் சரியாகப் பதிலளித்துவிட்டான். முத்து கணக்கில் புலியென்றே சொல்லவேண்டும்!

முத்து : ஐயோ! இரண்டாவது கேட்டது பரிட்சைக் கேள்வியா?

தலைமை : (எழுந்து) முத்து என்ற பழைய மாணவனே மறுபடியும் பரிட்சை செய்ததில் பரிட்சை முடிவுகள் :

ஒழுக்கம்—மெச்சத்தகுந்தது.

உடல்நிலை—போற்றத்தகுந்தது.

ஆங்கிலம்—பாஸ்.

தமிழ்—பாஸ்.

சரித்திரம்—பாஸ்.

விஞ்ஞானம்—பாஸ்.

பூகோளம்—பாஸ்.

பையனுக்கு இந்தச் சர்டிபிகேட்டை மீண்டும் எனது மகிழ்ச்சிகரமான வாழ்த்துக்களுடன் தருகிறேன்! வணக்கம்!

[முத்து திகைக்கிருன். வாத்தியார்கள் ஒவ்வொருவராகப் போகிருர்கள்.]

தமிழ் : என் பேர் பொடிமட்டையா? வா! உன்னைப் பொடிப்பொடியாக்கச் சொல்லுகிறேன்!

[போகிருர்.]

இஸ்டரி : கிழிந்த கோட், கில்ஜி மகமது! இவர் பிகானீர் ராஜ்யத்து இளவரசர்!

[போகிருர்]

சயன்ஸ் : கிளிமூக்கு வாத்தியாரா? 32 லட்சணமும் உன்கிட்டே இருக்கிறதா நினைப்போ!

[போகிருர்]

பூகோளம் : அல்வாத்துண்டு! உன்னையெல்லாம் கண்டதுண்டமாக்கினுத்தான் நல்லது!

[போகிருர்]

கண : கத்தரிக்காயா நான்! பேய் பூசனிக்காய்! உனக்குப் படிப்புக் கற்றுக்கொடுத்தவங்ககிட்டேயே, உன் கைவரிசையைக் காட்ட ஆரம்பித்தாயே! நடக்குமா?

[போகிருர்]

தலைமை : பரிட்சை முடிந்துவிட்டது! நீ போகலாம்!

முத்து : ஐயோ பாஸ் செய்துவிட்டேனு!

[நாற்காலியில் விழுகிருன். திரை விழுகிறது.]

(முற்றிற்று)

பாரத்திலிருந்து, 6-வது பாரம்வரை 4—12—0 மாதச் சம்பளம். ஏப்ரல், மே, இரண்டு மாதத்தைத் தவிர மற்ற பத்து மாதம் சம்பளம் கட்டணும். என்ன ஆச்சுது, ஐந்தாவது கிளாசில் 23—12—0, 1-வதிலிருந்து மூன்ருவதுவரை 105-0-0 4-வது பாரத்திலிருந்து 6-வது பாரம் வரை 142—8—0. மொத்தம் 271—4—0 மேற்கொண்டு லைப்ரரி பீஸ் வருஷத்துக்கு ஒரு ரூபாய், கேம்ப் 1—4—0, அசோசியேஷன் 1—0—0, ஏழு வருஷத்துக்கும் 22—12—0. கடைசி மூன்று வருஷம், லபாரடரி பீசுன்னு 4—8—0 கட்டினேன். இதையல்லாமல் எக்சாமினேஷன் பீஸ் 15 ரூபாய்! நோட்புக், புத்தகங்கள் வாங்கினது 203—8—0 இரண்டு தடவை எக்ஸர்கர்ஷன் அழைத்துக் கொண்டுபோனதுக்கு 5 ரூபாய் 5 ரூபாய் கட்டினேன். ஆனல் உண்மையாகச் செலவானது 4—6—0, 4—3—0 அதில் பாக்கி 1—7—0 ஆக மொத்தம் எனக்குச் சேர வேண்டிய பணம் மொத்தம் ரூ.518—7—0 அதில் ஏழணுவைத்தள்ளிக்கொண்டு, பாக்கி 518 ரூபாயைக் கொடுத்தால் போதும்!

கண : சரியாக அவ்வளவுதானு?

முத்து : சரியாக! கொஞ்சங்கூடப் பிசகில்லை!

கணக் : கொஞ்சங்கூடப் பிசகில்லை. சிறு கூட்டல் கழித்தல் வரைச் சரியாக இருக்கிறது. [கையைக் கொடுக்கிருர்] கங்கராஜுலேஷன், முத்து! கணக்குப் பரிட்சையில் நீ பாஸ் செய்துவிட்டாய்!

முத்து : என்ன? என்ன?

கண : நான் இரண்டு கணக்குகள் தருவதாகச் சொன்னேன். சுலபமானது, கடினமானது! முதல் கேள்விக்குச் சிறு தவறில் விடை தப்பாகிவிட்டது! 7 வருஷத்தில் செலுத்திய மொத்தப் பணம் எவ்வளவு என்பது என்னுடைய இரண்டாவது கடினமான கேள்வி! மாணவன் கடினமான கேள்வியை மிகச் சரியாகப் பதிலளித்துவிட்டான். முத்து கணக்கில் புலியென்றே சொல்லவேண்டும்!

முத்து : ஐயோ! இரண்டாவது கேட்டது பரிட்சைக் கேள்வியா?

தலைமை : (எழுந்து) முத்து என்ற பழைய மாணவனை மறுபடியும் பரிட்சை செய்ததில் பரிட்சை முடிவுகள் :

ஒழுக்கம்—மெச்சத்தகுந்தது.

உடல்நிலை—போற்றத்தகுந்தது.

ஆங்கிலம்—பாஸ்.

தமிழ்—பாஸ்.

சரித்திரம்—பாஸ்.

விஞ்ஞானம்—பாஸ்.

பூகோளம்—பாஸ்.

பையனுக்கு இந்தச் சர்டிபிகேட்டை மீண்டும் எனது மகிழ்ச்சிகரமான வாழ்த்துக்களுடன் தருகிறேன்! வணக்கம்!

[முத்து திகைக்கிருன். வாத்தியார்கள் ஒவ்வொருவராகப் போகிருர்கள்.]

தமிழ் : என் பேர் பொடிமட்டையா? வா! உன்னைப் பொடிப்பொடியாக்கச் சொல்லுகிறேன்!

[போகிருர்.]

இஸ்டரி : கிழிந்த கோட், கில்ஜி மகமது! இவர் பிகானீர் ராஜ்யத்து இளவரசர்!

[போகிருர்]

சயன்ஸ் : கிளிமூக்கு வாத்தியாரா? 32 லட்சணமும் உன்கிட்டே இருக்கிறதா நினைப்போ!

[போகிருர்]

பூகோளம் : அல்வாத்துண்டு! உன்னையெல்லாம் கண்டதுண்டமாக்கிஞத்தான் நல்லது!

[போகிருர்]

கண : கத்தரிக்காயா நான்! டேய் பூசனிக்காய்! உனக்குப் படிப்புக் கற்றுக்கொடுத்தவங்ககிட்டேயே, உன் கைவரிசையைக் காட்ட ஆரம்பித்தாயே! நடக்குமா?

[போகிருர்]

தலைமை : பரிட்சை முடிந்துவிட்டது! நீ போகலாம்!

முத்து : ஐயோ பாஸ் செய்துவிட்டேனு!

[நாற்காலியில் விழுகிருன். திரை விழுகிறது.]

(முற்றிற்று)

பிரிவைத் தடுத்த பரிவு!

[எழினி]

அவள் அழகு இடையர் சேரிக்கே தனிப் பொலிவையும் பெருமையையும் தருவதாகும்! குடிச்சிறப்பும் செல்வச் செழிப்பும் ஒருங்கே வாய்க்கப்பெற்ற உயர்குடியில் அவள் ஒரே மகளாகத் தோன்றியவளாதலால், பெற்றோரும் உற்றோரும் அவளைக் கண்மணிபோல் காத்துவருகின்றனர்.

அவள் இப்பொழுது பருவமங்கையாகக் காட்சியளிக்கிறாள். பருவம் அவளுக்குப் புதுப் புது அழகை மெருகு ஏற்றிக்கொண்டிருக்கிறது. அவளது நடை உடை நடிப்புகளில் கவர்ச்சிகரமான மாற்றம். அவளோடு சேர்ந்து விளையாடப் போவதும், உலாவப் போவதுமே தங்களுக்கு மகிழ்ச்சிதரும் செயல்களாக அச் சேரியில் வாழும் அவளுக்கு ஒத்த பிற மணமாகா மங்கையர் கருதுவர். தன்னை ஆடை அணிகளால் அழகுபடுத்திக்கொள்வதும், தோழியர்களோடு சேர்ந்து தாயம் ஆடுவதும், ஓடிவிளையாடப்போவதும், வரிப்பந்தாட்டம் ஆடுவதும், பூக்கொய்யச் செல்வதும், புனல் நீராடி மகிழ்வதும், உலாவி வேடிக்கை பார்ப்பதும் ஆன நிகழ்ச்சிகளில் காலத்தைக் களிப்போடு போக்கிக்கொண்டு வருகிறாள்.

அவள் வாழும் ஊரைச் சேர்ந்த ஆணழகன் இளைஞன் ஒருவன், அவளைப் பார்த்துவிடுகிறான். பார்த்ததும் காதல் மயக்கம்கொள்கிறான், எப்படியேனும் அவளைத் தனக்குரியவளாக ஆக்கிக்கொள்ளவேண்டும் என்று முடிவுகட்டுகிறான். அவளது உள்ளத்தைத் தன்பால் கவருவதற்கான முயற்சிகளையெல்லாம் செய்கிறான். காதல் வலையை ஓயாமல் வீசி அவளைப் பிடிப்பதற்கு முயலுகிறான். அவள் அச்சம், மடம், நாணம், பயிர்ப்பின் காரணமாக வலையில் சிக்க மறுத்துப் பல தடவை தப்பி ஓடிவிடுகிறாள். இளைஞன் விடா முயற்சியுடன் காதல் வலையை விரித்தவண்ணமாகவே இருக்கிறான். இறுதியில் வேறு வழியின்றி அவள் அவன் வலையில் சிக்கிக்கொள்கிறாள். இருவரும் காதலராக மாறுகின்றனர். களவொழுக்கம் நடைபெறுகின்றது.

மணம்புரிந்துகொண்டு இல்லற வாழ்க் இனிது நடத்தவேண்டும் என்ற பேரவா இ வருக்கும் உண்டு. ஆனால் தத்தம் பெற்ே கள் அதற்கு இசைவார்களோ இசையம டார்களோ என்ற ஐயப்பாடு இருவருக் இருந்துகொண்டேயிருக்கிறது. ஊரார்க் உற்றார்க்கும், பெற்றோர்க்கும் அன்றி அ நடத்தும் களவொழுக்க வாழ்க்கையில் ஈடு டிருப்பதைக் காட்டிலும், யாருக்கும் தெரி மல் வேற்றூருக்குக் கிளம்பிப் போய்விட்ட தாமும் அச்சமற்ற வாழ்வு நடத்த வழி ஏ படும், பெற்றோர்களும் வேறு வழியின்றி த குத் திருமணம் முடித்துவைக்க இசை என்ற கருத்தைத் தலைவன் தலைவியிடம் க கிறான். தலைவி, ஏது செய்யலாம் என்று த தோழியைக் கலந்துகொள்கிறாள். தோழி தன்னாலான உதவியைச் செய்வதாக வ களிக்கிறாள். தலைவி, இறுதியாகத், தலை னுடன் போய்விடுவது என்ற முடிவுக்கு வந் உடன் போக்குக்கு இசைகிறாள்.

தலைவன், தலைவி, தோழி ஆகிய மூவ சேர்ந்து உடன்போக்குக்கான நாள் ஒன்ற குறித்துக்கொள்கிறார்கள். அந்தக் கு பிட்ட நாளில் விடியற்காலையான வைகறை பொழுதில் தலைவன் ஊருக்கு வெளி சென்று ஒரு குறிப்பிட்ட இடத்தில் கா திருக்கவேண்டும் என்றும், தோழி யாருக் தெரியாமல் தலைவியை இட்டுக்கொண்டுவ தலைவனிடம் சேர்க்கவேண்டும், தலைவி அத கான முறையில் தன்னைத் தயார்ப்படுத் கொள்ளவேண்டும் என்றும் அவர்க குள்ளே முடிவுகள் எடுத்துக்கொள்ளப் டன.

தலைவன் தலைவியர் உடன்போக்குக்கா குறித்துக்கொண்ட நாளின் முதல் நாள் இ தலைவியின் பெற்றோர்களும், செவிலித்தா நன்றாக உறங்கிக்கொண்டிருக்கிறார்கள். த வியின் அருகே தோழி படுத்துக்கொண்டி கிறாள். மறுநாள் உடன்போக்கில் செல் போகிறோம், என்ற எண்ண அலைகள் த

வியை உறக்கங்கொள்ளவிடவில்லை. தான் போகப்போகும் வழி எப்படியெல்லாம் இருக்குமோ, தலைவன் எங்கெல்லாம் அழைத்துச் செல்வானோ, தாய் தந்தையர்கள் என்னவெல்லாம் எண்ணிக்கொள்வார்களோ என்பனபற்றித் தலைவி தோழியிடம் மெல்லிய குரலில் பேசிக்கொண்டிருக்கிறாள். தலைவனோடு செல்லப்போகிறோமே என்ற ஆவல் ஒருபக்கமும், பெற்றோர்கள் என்ன செய்வார்களோ என்ற அச்சம் ஒரு பக்கமும் தலைவியின் உள்ளத்தைக் குடைந்துகொண்டிருக்கின்றன. மகிழ்ச்சி மருட்சி ஆகியவற்றிற்கிடையே தலைவி தடுமாறிக்கொண்டேயிருந்து இரவுப்பொழுதை ஒருவாறு கழிக்கிறாள். இரவின் பிற்பகுதியில் தோழியும் உறங்கிக்கொண்டுவிடுகிறாள். தலைவி மட்டுமே விழித்துக்கொண்டு எதேதோ எண்ணமிட்டுக்கொண்டிருக்கிறாள்.

வைகறைப்பொழுது வருவதற்குச் சற்று முன்னே வீட்டிலுள்ள பணிப்பெண்கள் எழுந்து, தயிர் கடைவதற்கான முயற்சியில் ஈடுபடுகின்றனர். தயிரின் முடைநாற்றம் வீசாமல் இருக்கும்பொருட்டு போடப்பட்ட விளாம்பழத்தோடு, தயிர்நிறைந்த பானைகளைத் தயிர் கடையும் தூணிடத்திற் கொண்டுவந்து சேர்க்கின்றனர். பலகாலமாகக் கடைவதால் தேய்ந்துபோன நிலைமையிலுள்ள தண்டோடு கூடிய மத்தைத் தயிர்ப்பானையில் இட்டு, அதில் கயிற்றினைக் கோர்த்துக் கடைய ஆரம்பிக்கின்றனர். தயிர்ப்பானையைத் திறந்தவுடன் வெளிக்கிளம்புகிற விளாம்பழத்தின் மணமும், தயிர் கடைவதால் எழும்பும் சலசலப்பு ஒலியும் வைகறைப் பொழுது வந்துவிடுவதைத் தலைவிக்கு உணர்த்துகின்றன. தலைவி உடனே வாரிச் சுருட்டி எழுந்து தோழியை அவசரமாக ஆனால் ஓசையிடாமல் எழுப்புகிறாள். தோழி திடுக்கிட்டு எழுகிறாள்.

“வைகறை வந்துவிட்டதாடீ?” என்று தோழி தலைவியை அவசரமாக வினவுகிறாள்.

“ஆமாடீ! தயிர்கடையும் ஓசை உன் காதில் விழவில்லையா? நான் என்னடீ இப்பொழுது செய்யவேண்டும்?” என்று தலைவி கேட்கிறாள்.

தோழி: “நம்மைப் பார்ப்போர் நம்மை இன்னாரென்று அடையாளங்கண்டுகொள்ளாமல், இருட்டு குறைவதற்கு முன்பே கிளம்பிவிட வேண்டும் விரைவாகக் கிளம்பு!”

தலைவி: “இப்படியே கிளம்பட்டுமாடீ!”

தோழி: “இப்படியே கிளம்புகிறாயா? எப்படி கிளம்புவாய்? நமது தாய் தந்தையரெல்லாம் நன்றாக உறங்கிக்கொண்டிருக்கிறார்கள். இப்படியே கிளம்பினால், உன் கால் சிலம்பொலி கேட்டு அவர்கள் எல்லோரும் விழித்துக்கொள்வார்களே! பிறகு நீ போவது எங்கே?”

தலைவி: “அதற்கு என்னடீ செய்வது?”

தோழி: “என்ன செய்வதா? சிலம்பைக் கழற்றுவது; மெல்ல ஓரிடத்தில் வைத்துவிட்டு வருவது! அதைத்தான் செய்யவேண்டும்! போ! நாழி ஆகிறது!”

தலைவி அவசர அவசரமாகச் சிலம்பைக் கழற்றுகிறாள். அவளால் கழற்ற முடியவில்லை. தோழி உதவி செய்கிறாள். இரண்டு சிலம்புகளையும் கையில் எடுத்துக்கொண்டு மெல்ல தலைவி நகர்கிறாள்.

தோழி: (மெல்லிய குரலில்) “ஏடீ! இங்கே வா! இந்த வரிப்பந்தையும் கொண்டுபோய் வைத்துவிட்டுவா!”

தலைவி சிலம்புகளையும், பந்தையும் எடுத்துக்கொண்டு உள்ளறைக்குள் நுழைகிறாள். தோழி யாரேனும் வருகிறார்களா, தங்களைப் பார்க்கிறார்களா என்று சுற்றுமுற்றும் பார்த்துக்கொண்டிருக்கிறாள். உள்ளே சென்ற தலைவி வெளியே வரவில்லை. என்ன காரணம் என்பது தோழிக்குப் புலப்படவில்லை. நற்றாய் விழித்துக்கொண்டாளோ, செவிலித்தாய் பிடித்துக்கொண்டாளோ, வேறு யாரேனும் பார்த்துவிட்டார்களோ, யாரேனும் இடையூறாக நிற்கிறார்களோ என்று பலவாறாக எண்ணமிட்டுக்கொண்டு, அச்சத்துடன், தாமே போய்ப் பார்த்துவிட்டு வரலாம் என்ற கருத்துடன் தலைவி சென்ற இடம் நோக்கி மெல்லச் செல்கிறாள். தலைவி சிலம்புகளையும் பந்தையும் ஒருசேர ஓரிடத்தில் வைத்துவிட்டு, அவற்றை நோக்கி அழுதுகொண்டு நிற்பதைத் தோழி பார்க்கிறாள். தோழிக்கு ஒன்றும் புரியவில்லை. தோழியைக் கண்டவுடன் தலைவி சற்று மிகவாகச் செருமிச்செருமி அழத் தொடங்குகிறாள்.

தோழி: “ஏண்டீ அழுகிறாய்? என்ன நேர்ந்தது?”

தலைவி: (கண்ணீரைத் துடைத்துக்கொண்டே) “ஒன்றுமில்லையடீ!”

தோழி: “ஒன்றுமில்லாமலா, அழுதுகொண்டிருக்கிறாய்? அம்மா சினந்துகொண்டார்

களா? அப்பா பார்த்துவிட்டார்களா? என்னடி நடந்தது?"

தலைவி: "ஏதுமில்லையடி! நான் வெளியூருக்குப் போகவேண்டாம் என்று எண்ணுகிறேன்!"

தோழி: "என்னடி வேடிக்கை! போகவேண்டும் என்று இந்நேரம் வரையில் துடியாய்த் துடித்துக்கொண்டிருந்தாய்! இப்பொழுது போகவேண்டாம் என்று எண்ணுகிறேன் என்கிறாயே! உனக்குப் பைத்தியம் பிடித்துவிடித்தா, என்ன?"

தலைவி: "பைத்தியம் ஒன்றும் பிடிக்கவில்லை! உள்ளபடியேதான் கூறுகிறேன்!"

தோழி: "காரணந்தான், என்ன? அதைச் சொல்லடி!"

தலைவி: "நான் வைத்துவிட்டுப் போகும் இந்தப் பந்தையும் சிலம்பையும் காணும் நம்முடைய விளையாட்டுத் தோழிகளெல்லாம் எவ்வளவு வருந்துவார்கள்? என்னுடைய தாய்தந்தையரெல்லாம் எவ்வளவு துன்பப்படுவார்கள்? அதையெல்லாம் நினைத்துக்கொண்டேன். எனக்கு ஒரே அழுகையாகவும், துக்கமாகவும் வருகின்றன! நான் என் செய்வேனடி!" (என்று கூறிவிட்டுத் தலைவி மீண்டும் அழுகிறாள்).

தோழி: "பூ! இவ்வளவுதானா? இந்த நினைவெல்லாம் முன்னாலேயே யல்லவா வந்திருக்கவேண்டும்? இதற்கு இவ்வளவுத் தொல்லைகள் பட்டிருக்கவேண்டியதில்லையே! இதை அப்பொழுதே சொல்லியிருக்கலாமே! அவனை ஊருக்கு வெளியே காத்திருக்கச் சொல்லியிருக்கவேண்டியதில்லையே!"

தலைவி: "இப்பொழுது என்னடி செய்வது?"

தோழி: "என்ன செய்வதா? முக்காடிட்டுக்கொண்டு மூலையில் உட்கார்ந்து அழுவது!"

தலைவி: "தோழி! சினந்துகொள்ளாதே! நீ என் நிலையில் இருந்தால் இப்படியெல்லாம் பேசமாட்டாயடி!"

தோழி: "நல்லவேளையாக நான் உன் நிலையில் இல்லை! இருந்தால் இன்னும் எவ்வளவோ மானத்தை விடவேண்டி வரும்?"

தலைவி: "மானம் என்னடி போய்விட்டது?"

தோழி: "போகாமல் இன்னமும் இருந்துகொண்ட இருக்கிறது? நாம் வாக்குறுதி அளித்துவிட்டு வந்த அந்த தலைவனின் முகத்தில் எப்படி விழிப்பது?"

தலைவி: "தலைவனிடம் என்னடி சொல்வது?"

தோழி: "சொல்வதற்கு என்ன இருக்கிறது? தலைவி உன்னை விரும்பவில்லை என்று கூறவேண்டியதுதான்!"

தலைவி: "நான் அவனை விரும்பவில்லை என்று கூறவில்லையே! அவனை எப்படியேனும் மணந்துகொள்ளவேண்டும் என்றுதானே சொல்கிறேன்!"

தோழி: "அவனை ஏமாற்றியதற்குப் பிறகு எப்படி மணந்துகொள்ள முடியும்?"

தலைவி: "எப்படியோ நீதான் உதவி செய்ய வேண்டுமடி! நீ நினைத்தால், எப்படியும் அவனைப் பெற்றோர்களின் இசைவு பெற்றுவந்து மணம் முடித்துச் செல்லும்படி செய்யலாம்!"

தோழி: "நான் என்னடி செய்யமுடியும்? அவன் எப்படி என்னை மதிப்பான்?"

தலைவி: "அவனது பெற்றோர்களும் எனது பெற்றோர்களும் கலந்து பேசினால் பிறகு எங்கள் திருமணம் முடிந்த மாதிரிதான். எனது பெற்றோர்கள் மறுக்க அவனிடம் ஒரு குறைபாடும் இல்லையே! அவன் முறைப்படி வந்து நேரிடையாகத் திருமணம் முடித்தலைத்தான் நான் விரும்பியிருக்கிறேன் என்று நீ அவனிடம் போய்ச் சொல்! அவன் என் விருப்பத்தை நிறைவேற்றுவான் என்பது உறுதி. ஏன் அப்படிச் சொல்கிறேன் என்றால், அவன் ஆடவரிலே மிகவும் நல்லவன்!"

தோழி: "என்றால் உன் விருப்பத்தைத் தடுக்க எப்படி முடியும்? என்னமோ என்னால் முடிந்த மட்டிலும் உன் விருப்பத்தை நிறைவேற்ற முயலுகிறேன்!"

தலைவியும் தோழியும் பேசி முடிவதற்குள் பொழுது புலர்ந்து எங்ஙனும் வெளிச்சம் தோன்றிவிடுகிறது. தலைவன் ஊருக்கு வெளியே குறித்தயிடத்தில் நீண்டநேரம் காத்திருந்துவிட்டு, தலைவி வராததினால் ஏற்பட்ட ஏக்கத்துடனும் வருத்தத்துடனும் வீடு நோக்கித் திரும்புகிறான்.

தோழி பிறகு தலைவனைத் தனியே கண்டு தலைவியின் நிலைமையையும், அவள் படும் தொல்லைகளையும், துன்பங்களையும், அவளது விருப்பத்தையும் தெளிவாக எடுத்துக்கூ

டன்போக்கைக் கைவிட்டுவிட்டுத் திருமணத் திற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு வேண் க்கேட்டுக்கொள்கிருள். தலைவன் தலைவியின் ாற்கொண்டிருந்த தணியாக் காதலன்பின் ாரணமாகத் தலைவியின் எண்ணத்தின்படி டக்க உறுதி கூறுகிருன். தோழி களிப்போடு தலைவியை அடைகிருள். காதலன் உடன் போக்கைத் தவிர்த்துவிட்டுக் கடிமணம் புரிய இசைந்துவிட்டான் என்பதை, அறிந்து பேருவகை கொள்கிருள்!

ஃ ஃ ஃ

இது நற்றிணை 12-ஆம் பாடலின் கருத்தை ஒட்டி எழுந்த விளக்கமாகும். இதனைப் பாடிய வர் கயமனர் என்னும் புலவராவார்.

விளம்பழங் கமழும் கமஞ்சூற் குழிசிப்
பாசந் தின்ற தேய்கால் மத்த
நெய்தெரி இயக்கம் வெளில்முதன் முழங்கும்
வைகுபுலர் விடியல் மெய்கரந்து தன்கால்
அரியமை சிலம்பு கழீஇப் பன்மாண்
வரிபுனை பந்தொடு வைஇய செல்வோள்
இவைகாண் தோறும் நோவர் மாதோ
வளியரோ வளியரென் ஆயத் தோரென
நும்மொடு வரவுதான் அயரவும்
தன்வரைத்(து) அன்றியுங் கலுழ்ந்தன கண்ணே.

—[நற்றிணை—12.]

[பொழிப்புரை : முடைநாற்றம் தீரும்படி விளாம்பழம் போட்டுவைத்தலாலே, அப்பழத்தின் மணம் வீசுகின்ற நிறைந்த தயிர்த்தாழியில், கயிறு சுற்றியிழுத்துத் தேய்தலாலே தேய்ந்த தண்டினையுடைய மத்தை இட்டு, வெண்ணெய் தோன்றும்படிக் கடைதலாலே, தயிர் கடையும் தூண்டியில் ஓசை கிளம்புகின்ற, தங்கிய இருள் தீரும் வைகறைப்பொழுதில், தன் உடல் பிறர்க்குத் தோன்றாதபடி மறைத்துத், தன் காலிலணியும் பருக்கைக் கற்கள் போடப்பட்டச் சிலம்பைக் கழற்றிப் பல மாட்சிமைப்பட்ட வரிந்த புனைந்த பந்தோடு சேர்த்து ஓரிடத்தில் வைக்கச் செல்லுபவள், தன்னுள்ளத்து "என்தோழிமார் இவற்றைக் காணுந்தோறும் துன்புறுவார்களே! அவர்கள் இரங்கத்தக்கவர்கள் அல்லவா?" என்று எண்ணிக்கொண்டு நும்மோடு வருதலை மேற்கொள்ள அவள் தயாராக இருக்கவும், அவளது கண்கள் தம் அளவுக்கும் அடங்காமல் அழத்தொடங்கின; ஆதலால் நுமக்கு ஏற்றவாறு இனிச் செய்வீராக!

குழிசி - (தயிர்த்)தாழி; பாசம் - கயிறு; மத்த - மத்திட்டு; நெய் - வெண்ணெய்; இயக்கம் - அசைவு; வெளில் - தயிர்கடைதற்கு நடப்படும் தூண்; வைகுபுலர் தங்கிய இருள் தீரும்; விடியல் - வைகறைப்பொழுது; மெய்கரந்து - உடல் மறைத்து; அரி - பருக்கைக்கல்; கழீஇ - கழற்றி; கலுழ்ந்தன - அழுதன.]

ஃ • ஃ , ஃ

தத்தம் பெற்றோர்களின் இசைவு கிடைக் மோ கிடைக்காதோ என்று ஐயுறுகிற காத ன் காதலியார், யாருக்கும் தெரியாமல் வெளியூருக்கு ஓடிவிடுவது என்ற பழக்கம் இந்தக் காலத்தில் ஆங்காங்கு காணப்படுவது போன்றே பண்டைத் தமிழகத்திலும் இருந்து வந்திருப்பது புலனாகும். காதலன் காதலியர்

திருமணம் நடைபெறுவதற்கு முன்னால் ஒருவரையொருவர் காணக்கூடாது, கண்டு பேசக்கூடாது என்று இன்று நிலவும் சமுதாயக் கொடுமைகள் பண்டைத் தமிழகத்தில் அவ்வளவாக இல்லை என்று கூறலாம். தலைவன் தலைவியர் களவொழுக்கத்தில் ஈடுபடுவதும், தோழி அவர்களுக்கு உதவியாக இருப்பதும், இன்றியமையாமை ஏற்படும்போது அவர்கள் உடன்போக்கில் போவதும் பண்டைத் தமிழகம் ஏற்றுக்கொண்டிருந்த பண்புகளாகும். காதலன்மீது அளவுகடந்த காதலன்பு இருந்த போதிலும், பெற்றோர்களையும் ஆயத்தாரையும் விட்டுச் செல்ல மனம்வராமல் தலைவி படும் துன்பமும், அவளது மனநிலையும் இச்செய்யுளில் அழகுபட விளக்கிக்காட்டப்பட்டிருக்கின்றன. தலைவி தன் துக்கத்தை அடக்கிப் பார்க்கிறாள்; அவனையும் மீறி அழுகை அவளுக்கு வந்துவிடுகிறது என்பது உலக இயல்பைப் படம்பிடித்துக் காட்டும் பகுதியாகும்.

தயிர்ப்பானையின் முடைநாற்றம் வீசாமல் இருக்கும்பொருட்டு விளாம்பழத்தைத் தயிர்ப்பானைக்குள் போட்டுவைக்கும் பழக்கம் பண்டைநாட்களில் உண்டு என்பது தெரிய வருகிறது. வைகறைப்பொழுதுக்கு முன்பே இடைச்சியர் எழுந்துவிடுவர்; தயிர்கடைவதற்கு என்று தூண் நடப்பட்டிருக்கும்; தூணருகில் தயிர்ப்பானையைக் கொண்டுபோய் வைப்பர்; மத்தினை அதில் இடுவர்; தூணோடு மத்தைப் பொருத்துவர்; மத்தின் தண்டில் கயிற்றைச் சுற்றி இருமுனையையும் பிடித்து இழுப்பர்; கயிற்றைச் சுற்றி இருப்பதால் மத்தின் தண்டு தேய்ந்துபோயிருக்கும்; வெண்ணெய் தோன்றும்படிக் கடைவர்; தயிர் கடையும் ஓசை வைகறைப் பொழுதிலேயே கிளம்பிவிடும் என்பனபோன்ற இடையர் சேரி வாழ்வின் இயல்புகள் இச்செய்யுகளில் அழகுறக் கூறப்பட்டிருக்கின்றன. பகற்பொழுதில் கடைந்தால், வெப்பந்தாங்காது வெண்ணெய் உருகிவிடுமாதலால், வைகறைப்பொழுதிலேயே கடையும் பழக்கத்தைக் கொண்டிருந்தது கூறப்பட்டது. மேலும் காலையிலேயே தயிர், வெண்ணெய் முதலியவற்றை விற்பனைக்குக் கொண்டுசெல்லவேண்டிய இன்றியமையாமை குறித்தும் வைகறைப் பொழுதில் தயிர்கடையும் பழக்கத்தைக் கொண்டிருந்தனர் என்று கூறலாம்.

பெண்கள் ஓசையிடும் சிலம்புகளைக் காலில் அணிவதும், பூவினாலோ, துணியினாலோ, தோலினாலோ, நாரினாலோ, கொடியினாலோ வரிந்து கட்டப்பட்ட பந்தினைக்கொண்டு பெண்கள் பந்தாட்டம் ஆடுவதும் பண்டைத் தமிழகத்தில் சிறந்திருந்த பழக்கங்களாகத் தெரியவருகின்றன.

தலைவன், தோழியின் கூற்றைக் கேட்டு உடன்போக்கைத் தவிர்த்துவிட்டுத், திருமணத்திற்கு இசைந்தான் என்பது குறிப்பால் பெறப்படுவதாகும்.

கலாம் விளைக்காத காதலர்கள் இல்லை

“உண்மையான காதலர்கள் இருவர் மணவாழ்க்கையில் ஒன்றுபட்டால், அவர்களிடையே சிறிதளவு கலாமும் ஏற்படுவதில்லை!” என்பது இலக்கியக் காதல் கற்பனையின்பாற்பட்ட கூற்றே அல்லாமல்,உண்மையில் வாழ்க்கையில் காணக்கூடியதல்ல என்று சில்வனசு (Sylvanus) ஈவ்லின் துவல் (Evelyn Duvall) என்ற இரண்டு பெரிய டாக்டர்களும் செப்புகின்றனர். அனைவருடைய மணவாழ்க்கையிலும் சிறுசிறு சச்சரவுகள் ஏற்படத்தான் செய்யும்; அப்படி ஏற்படுவது இயல்பான தன்மையேயன்றி வேறல்ல என்று அந்த டாக்டர்கள் தாம் எழுதிய ‘உங்கள் மணவாழ்க்கையின் பாதுகாப்பு’ (Saving your Marriage) என்ற நூலில் தெளிவுபடுத்தியுள்ளனர்.

எல்லோருடைய மணவாழ்க்கையிலும் பெருந்தொல்லைகளை விளைவிக்கக்கூடிய சச்சரவுகள் ஏற்படாது என்றாலும், மின்னல்போன்று தோன்றி மறையக்கூடிய சச்சரவுகூட ஏற்படாத மணமக்கள் வாழ்கிறார்கள் என்று கூறமுடியாது என்றும் பொறுத்துக்கொள்ளக்கூடிய மறந்துவிடக்கூடிய, சரிசெய்துகொள்ளக்கூடிய சச்சரவுகள் இயற்கையாய் ஏற்படவே செய்யும் என்றும் அவர்கள் கூறுகிறார்கள். சச்சரவைப் பெரிதாக்காமலும் அதனைக் கண்டு கலங்கிவிடாமலும். அதனைச் சரிசெய்துகொள்வதுதான் மணவாழ்க்கையில் தேவைப்படும் முக்கியப் பண்பாகும் என்று அந்த டாக்டர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.



(22)

எமபுரியில், தனது மாளிகையில், தனிமையான மஞ்சத்தில் அமர்ந்ததும், யமன் தனது வாயிலிருந்து எலுமிச்சம்பழத்தை உமிழ்ந்தான். மந்திரத்தைச் சொன்னதும் சுவாகாதேவி எழுந்தாள். கனிவகைகளும், தேனும், பாலும், தீஞ்சுவை அமுதும் நிறைந்த கிண்ணங்கள் பல அங்கிருந்தன. கனிவகைகளை எடுத்து, யமன் தன் காதலியின் உதட்டருகே கொண்டுபோனான். அவளோ, "பசியில்லை!" என்று உதறினாள். சுவாகாதேவி வார்த்திட, பொற்கிண்ணத்திலிருந்த சோமரசத்தை யமன் பருகினான், பின் பொற்கொடியாள் தந்த சோமரசத்தையும் பருகினான், கண்ணயர்ந்தான்.

யமன் கண் மூடியதுதான் தாமதம்! கனிவகைகளையும், சோமரசத்தையும் எடுத்துக்கொண்டு, சுவாகாதேவி பக்கத்து அறைக்குள் சென்று, தான் விழுங்கியிருந்த எலுமிச்சம்பழத்தை உமிழ்ந்தாள், மந்திரத்தைச் சொன்னாள், அக்னிதேவன் அவள் எதிரே உட்கார்ந்தான். சுவாகா தான் கொண்டுவந்த கனிவகைகளையும், சோமரசத்தையும் தன் காதலன்முன்வைத்து உபசரித்தாள்.

யமன் கொடுத்தபொழுது, "பசியில்லை!" என்று ஒதுக்கியவள், இப்பொழுது அக்னியுடன் போட்டியிட்டு உண்டாள். பருகிய சோமரசம் அவர்கள் வாய்களிலிருந்து வழிந்தது, காமம் அவர்கள் கண்களிலிருந்து வழிந்தது.

"அன்பே! அக்னிதேவரே! உம்மை நெருங்கினால் சுடும் என்று மற்றவர்கள் கூறுகிறார்கள்! எனக்கோ உம்மை நெருங்கி அணைந்தாலன்றோ, என் உடல் குளிருகிறது!" என்று சுவாகா உருகினாள்.

"சுவாகா! என்னைக் கனியாக்கி நீ விழுங்குகிறாய். கனிபோலுள்ள உன்னை அப்படியே விழுங்கிவிடலாம்போலிருக்கிறது!" என்று அக்னி கொஞ்சினான்.

நாள்தோறும் இதைப்போன்ற இரு நாடகங்கள் யமனுடைய மாளிகையில் நடைபெற்றன. யமனுக்குச் சுவாகாவின்மேல் ஆசை, சுவாகாவிற்கு அக்னியின்மேல் ஆசை! ஆனால் யமன் மனங்கோணும்படி சுவாகா நடந்துகொள்ளவில்லை. ஆதலால் அவள் செய்து வரும் சூது—யமன் செய்வதே ஒரு பெரிய சூது. அந்த சூதுக்காரனையும் ஏமாற்றுமளவுக்கு அதைவிடப் பெரிய சூதை சுவாகா செய்துவந்தாள். அந்தச் சூது—யமனுக்குத் தெரியாமலிருந்தது.

ஆனால் பூலோகத்தில் முனிவர்கள் நடத்தி வந்த யாகங்களில், நெருப்பு அடிக்கடி அணைந்து வந்ததாம். இரவு நேரங்களில் சில நேரம், யாகத்தீ நன்றாக எரியும். பின் திடீரென்று அணைந்துவிடும். எவ்வளவு விறகுகள் போட்டு, நெய்விட்டு, மந்திரங்களைச் சொன்னாலும் நெருப்புப் பற்றுவதில்லை. இரவில் வளருகிற அளவுகூட, பகலில் யாகத்தீ வளருவதில்லை. நெருப்பு அதிகமாக அணைந்துவிடுகிறது என்ற குறைபாடு, பூலோகத்தில் எல்லா இடங்களிலிருந்தும் வந்தன. முனிவர்கள் எவ்வளவுதான் அக்னி மந்திரங்களைச் சொன்னாலும் யாகத்தீ வளர்வதில்லை. அக்னிதான் அங்கு மற்றொரு மந்திரத்தில் கட்டுப்பட்டிருக்கிறானே!

சுவாகாவுடன் அக்னிதேவன் தனிமையாக இருக்கும்பொழுது மட்டும், எல்லா இடங்களிலும், அக்னியின் செயல்—நெருப்பு இருந்தது. சுவாகா மந்திரம் சொல்லி, அக்னியை எலுமிச்சம் பழமாக்கியதும், அதே விநாடி நெருப்பு எல்லாவிடங்களிலும் அடங்கிவிடும். பின் மறுபடியும் யமனுடைய மந்திரத்தால் சுவாகா

உருப்பெற்று, சுவாகாவின் மந்திரத்தால் அக்னி உருப்பெறும் வரையில் நெருப்பு எங்கும் இருக்காது. அக்னி தன்னுருவத்தை அடைந்து சுவாகாதேவியுடன் இருக்கும் சில நாழிகள் மட்டுமே நெருப்பு எல்லாவிடங்களிலும் இருக்கும்.

பூலோகத்தில் யாகஞ்செய்பவர்களுக்கு, அக்னி அடிக்கடி மறைந்துவிடுவது ஆச்சரியமாக இருந்தது. யாகாதி காரியங்கள் சரிவர நடைபெறவில்லை. பூலோகத்து முனிவர்களெல்லாம் ஒன்றுகூடி தேவர்களிடம் முறையிட்டார்கள், தாங்கள் நடத்தும் யாகங்களுக்கு அக்னிதேவன் அருள் புரிவதில்லையென்று.

தேவர்கள் அக்னிதேவனைத் தேடினார்கள். தேவலோகத்தில் இல்லை, அரம்பையர்கள் அருகிலும் இல்லை. முன்போல், தண்ணீரில் எங்கேயாவது ஒளிந்திருக்கிறானோவென்று, வருணனின் அனுமதியுடன், கடல் குளம் ஆறு ஏரி எல்லாவிடங்களிலும் தேடினார்கள். அக்னிதேவனை எங்கும் காணமுடியவில்லை.

பின் தேவாதி தேவர்கள் ஒன்றுகூடி, திருப்பாற்கடலில் பள்ளிகொண்டிருக்கும் திருமாலிடம் போய் முறையிட்டுக்கொண்டார்கள், "ஏ! அனாதரட்சகா! அக்னிதேவனைக் காணோம்! அக்னி இல்லாததால் பூலோகத்தில் நடைபெறவேண்டிய யாகாதிகாரியங்கள் தடைப்பட்டிருக்கின்றன. இந்த நிலையை, எம்பெருமானே! தேவரீர் அனுமதிக்கலாமா? அக்னி தேவனை உடனே அழைத்துத்தாருங்கள். அபயம்! அபயம்!"

தேவர்கள் முறையிட்டதைத் திருமால் புன்னகையுடன் கேட்டுக்கொண்டார். திருமால் புன்னகை செய்ததைப் பார்த்ததும், தேவர்களுக்குத் தங்களுக்கு அனுகூலம் என்று கொண்டாடினார்கள்.

அனந்தசயனனான திருமால், கருடாழ்வாரை அருகே அழைத்து "போய், எமதர்மனை அழைத்துவா!" என்று கட்டளையிட்டார். எமதர்மனை அழைக்கக் கருடாழ்வார் பறந்துபோனார்.

தாங்கள் முறையிட்டதும், எமதர்மனை அழைத்துவரும்படி திருமால் சொன்னதும், "ஒருவேளை, அக்னியின் உயிரை எமதர்மன் கைப்பற்றிவிட்டானோ!" என்ற ஐயம் சில தேவர்களுக்கு உண்டாயிற்று. "அப்படியிருக்காது, அக்னி அமுதம் உண்டவன், சிரஞ்சீவித்தன்மைபெற்றவன்! அவன் உயிரை எமதர்மன் வாங்கியிருக்கமாட்டான்" என்று சிலர் பதில் சொன்னார்கள்.

"தவறுதலாக, அக்னியின் உயிரை யமன் எடுத்திருந்தால்..."

"இருக்கவே இருக்காது. யமனிடம் தவறு என்று ஒன்று இருக்கமுடியாது. தர்மத்திலிருந்தும் சிறிதும் மாறி அவர் நடப்பதேயில்லை. பெயரே யமதர்மன் என்றல்லவா இருக்கிறது! அவரால் ஏதும் குற்றம் உண்டாகியிருக்காது. அக்னி ஒருவேளை தவறு செய்துவிட்டு, எங்கேயாவது ஒளிந்திருப்பான். அது யமதர்மனுக்கும், திருமாலுக்கும் மட்டும் தெரிந்ததாகயிருக்கும். அதனால்தான் திருமால் யமனை அழைத்துவரச் சொல்லுகிறார்" என்று தேவர்கள் பேசிக்கொண்டனர்.

இதற்குள் கருடாழ்வார் யமனை அழைத்து வந்தார். யமன் வேகமாக எருமை வாகனத்திலிருந்து இறங்கி வந்தார்.

பள்ளிகொண்டிருக்கும் பரந்தாமனின்முன் யமன் வீழ்ந்து வணங்கி, "பிரபு! அழைத்த காரணம் யாதோ?" என்று வினவினான்.

"அக்னி தேவனைக் காணோமாம்! தேவர்கள் வந்து முறையிடுகிறார்களே!" என்று திருமால் கேட்டார்.

"அக்னியைக் காணோமா? அதிசயமாயிருக்கிறதே! ஆனால் நான் அவனைக் கைப்பற்றவில்லை, என்னுலகத்தில் அவன் இல்லை! நான் தவறு செய்தால், மயிர் நுனியில் தொங்கும் மலை என் தலைமீது விழுந்திருக்காதா?"

"மற்றலோகங்களிளெல்லாம் தேடிவிட்டார்கள். உன் உலகத்தில் அக்னிதேவன் ஒருவேளை ஒளிந்திருந்தால், என்செய்வது?"

"இருக்காது. சித்திரகுப்தனைக் கேட்கிறேன். யமதூதர்களை விட்டுத் தேடச்சொல்லுகிறேன்."

"அவர்கள் எங்கேயிருக்கிறார்கள்?"

"என்னுடைய பட்டிணத்தில்—யமபுரியில். கருடாழ்வார் கூப்பிட்டதும் நான் தனியாக வந்தேன்."

அதைக் கேட்டதும் பரந்தாமன் சிரித்தார். "எமதர்மா! நீ தனியாகவா வந்திருக்கிறாய்?"

யமதர்மன் சுற்றிலும் பார்த்து, "நான் மட்டும் வந்தேன். இதிலென்ன சந்தேகம்?" என்றான்.

"யமனே! என்னிடம் மறைக்காதே! விழுங்கியிருக்கும் எலுமிச்சம்பழத்தை உமிழ்வாயாக!" என்று திருமால் கட்டளையிட்டார்.

அதைக் கேட்டதும், யமன் திடுக்கிட்டான். வேறு வழியின்றி, கலக்கத்துடன், எலுமிச்சம் பழத்தை உமிழ்ந்தான்.

திருமால் அந்த எலுமிச்சம் பழத்தை எடுத்து, மந்திரமொன்றைச் சொன்னார். சுவாகாதேவி நின்றாள்.

கூடியிருந்த தேவர்கள் ஆச்சரியப்பட்டார்கள். காணாமற்போன தட்சன் மகள், யமனால் திருடப்பட்டாள் என்று அவர்களுக்குத் தெரிந்தது. யமனின் திருட்டுத்தனத்தைப் பற்றி ஏளனமாகப் பேசினார்கள்.

நாணிக்கோணி நின்றுகொண்டிருக்கும் சுவாகா தேவியைப் பார்த்து, "நீ விழுங்கியிருக்கும் பழத்தையும் உமிழ்வாயாக!" என்று திருமால் சொன்னார். சுவாகா பழத்தை உமிழ்ந்ததும், மந்திரத்தைத் திருமால்சொல்ல, அக்னிதேவன் அந்த இடத்தில் நின்றான்.

தேவர்கன் ஆச்சரியமடைந்தனர். எமதர்மன் மீசை துடிக்க, பற்களை நறநறவென்று கடித்துக்கொண்டான்.

அக்னிதேவன் உருப்பெற்றதும், அணைந்திருந்த யாககுண்டங்களில் தீ வளர்ந்தது. முனிவர்கள் விட்டிருந்த யாகத்தை மீண்டும் நடத்தினார்கள். தேவர்கள் கலைந்து சென்றார்கள்.

தட்சனின் மகளைத் திருடி, பழமாக்கிக் கள்ளத்தனமாகக் காமத்தைத் தீர்த்துக்கொண்ட யமனுக்கு ஏதாவது தண்டனை கிடைத்ததா? என்று கேட்பீர்கள். தன்னையொருவன் அழைத்துச்செல்ல, அதற்குடன்பட்டுவிட்டு, பின் அவனுக்குத் தெரியாமல் மற்றொரு கள்ளக் காதலனை ஏற்படுத்திக்கொண்ட சுவாகா தேவிக்குச் சாபம் ஏதாவது தரப்பட்டதா? என்று கேட்கத் தோன்றும். தன் தொழிலை விட்டு முனிவர்கள் செய்யும் யாகங்களைத் தடைப்படுத்தி, மாற்றானின் வசமிருப்பவளிடம் மயங்கிய அக்னிதேவனுக்குக் கண்ணோ காலோ குறைந்திருக்கவேண்டும் என்று தோன்றும். புராணங்கள் இத்தகைய கேள்விகளை உண்டாக்கிக்கொள்வதில்லை, இத்தகைய காமச்செயல்கள், இழி நடத்தைகள் தேவலோகத்தில் அன்றாட வழக்கங்கள், தேவர்கள் பயிற்சிபெற்ற பழக்கங்கள். எனவே யாருக்கும் தண்டனையோ, கண்டனமோ தராமல் புராணக்காரர், சுபமாகவே கதையை முடிக்கிறார், தேவர்கள் பார்த்து சுவாகாதேவியை அக்னிக்கு மணம்முடித்தார்கள் என்று! இவ்வாறாக, அக்னிதேவனுக்கு சுவாகாதேவி மனைவியாகக் கிடைத்தாள்.

அக்னிதேவனுக்கு சுவாகாதேவி மட்டுமல்லாமல் சுதரிசனை என்பவளும் மனைவியாக இருந்தாள் என்று புராணம் கூறுகிறது. சுதரிசனை மானிடப் பெண், சுதரிசனன் என்பவனுடைய மகள். சுதரிசனையை ஒருமுறை கண்ட அக்னி அவளைத் தனக்கு மனைவியாகத் தரும்படிக் கேட்டுக்கொள்ள, சுதரிசனன் மறுத்துவிட்டான். அதனால் கோபங்கொண்ட அக்னி, தன் தொழிலை நிறுத்திக்கொண்டான். பூலோகத்தில் நெருப்பு என்பது இல்லாமல் போய்விட்டது. வீடுகளில் உணவாக்கத் தீ எரிவதில்லை, யாககுண்டங்களில் நெருப்பு வளர்வதில்லை.

யாகங்கள் நிறுத்தப்பட்டதும் முனிவர்கள் ஒன்றுகூடி சுதரிசனனிடம் போய் முறையிட்டுக்கொண்டார்கள்—அவர்களுக்கு அக்னி வளராததின் காரணம் அதற்குள் தெரிந்துவிட்டதுபோலும். முனிவர்கள் வந்து குறையிரக்கும்பொழுது, மன்னன் சுதரிசனன் என்ன செய்வான்? கடைசியாக உலகில் யாகாதி காரியங்கள் நடைபெறவேண்டும் என்பதற்காக, சுதரிசனன் தன் மகளை அக்னிக்குத் தருவதாக வாக்களித்தான்.

மன்னனிடம் வாக்குறுதிபெற்ற முனிவர்கள், அக்னிதேவனைக் குறித்துத் தவஞ்செய்ய, அக்னி அவர்கள்முன் தோன்ற, சுதரிசனை உனக்குக் கிடைப்பாளென்று முனிவர்கள் சொல்ல, அக்னி மானிட வடிவமெடுத்து வந்தான்.

மானிட வடிவமென்றால், எந்தக்கோலமாயிருக்குமென்று நினைக்கிறீர்கள்! சாட்சாத் பிராமணனைப்போல. அதுதான் மானிடப் பிறவியிலேயே மிக சிரேஷ்டமானது என்று வேதங்களெல்லாம் சொல்வதால்!

வேதியன் உருவில் அக்னி வந்தான், க்ஷத்ரிய வகுப்பைச் சேர்ந்த சுதரிசனன் தன் மகள் சுதரிசனையை தாரைவார்த்து—அதாவது தானமாகக் கொடுத்தான். தானத்தைப் பெற்ற பிராமணன் பெண்ணை அழைத்துக் கொண்டு போனான். பின் பூலோகத்தில், அக்னி ஆரம்பமாயிற்று, யாகக்குண்டங்களில் தீ வளர்ந்தது, யாகாதி காரியங்கள் நடைபெற்றன. வேதோத்தமர்கள் மனமகிழ்ந்தார்கள்.

ஒருசமயம் சப்த முனிவர்களான, அத்ரி, வசிட்டர், காசிபர், கௌதமர், பரத்வாசர், விச்வாமித்ரர், சமதக்னி, ஆகியவர்கள் ஒரு யாகம் நடத்த ஆரம்பித்தார்களாம். சாதாரண முனிவர்கள்—சத்திரத்துச் சாமியார்கள் ஒரு

யாகம் ஆரம்பித்தாலே ஏற்பாடுகளும், அது நடக்கும் காலமும் அதிகமாக இருக்கும். அதிலும், முனிவர்களுக்கெல்லாம் தலைவர்களாக விளங்கும் சப்தரிஷிகள் ஆரம்பித்த யாகம் எப்படிப்பட்டதாக இருக்கும்? யாகம் மிக நீண்டகாலம் நடைபெற்றது. யாகக் குண்டத்தில் தீ கொழுந்துவிட்டெரிந்தது. நெய் முதலிய ஆகுதிகள் தவறாமல் சொட்டப்பட்டு வந்தன, யாக மந்திரங்கள்—அத்தகைய மந்திரங்களை உண்டாக்கியவர்களே பெரும்பாலும் அந்தப் பெரிய முனிவர்கள்—குறைவில்லாமல் சொல்லப்பட்டன. ஆனால் யாகம் சீக்கிரத்தில் முடிவதாயில்லை.

யாகம் வளர்ந்த அளவில், கடுந்தவம் செய்வதில் வல்லவர்கள் என்று பெயரெடுத்த சப்த முனிவர்களால்கூட அந்த யாகத்தைத் தொடர்ந்து நடத்த முடியவில்லை. பகலும் இரவும் ஓமகுண்டத்தில் அருகில் அமர்ந்து மந்திரங்களை முணுமுணுத்துக்கொண்டிருந்தது, அந்த முனிசிரேஷ்டர்களுக்கு அலுத்துவிட்டது. யாகத்தைப் பகலில் மட்டும் நடத்துவதென்று அவர்கள் முடிவுசெய்தனர். இரவில் யாகம் நடைபெறாவிட்டாலும், யாகத்தீ இரவிலும் எரிந்துகொண்டேயிருக்கவேண்டும். ஏனென்றால், ஒரு யாகத்தில் ஒரே ஒரு முறைதான் யாகக்குண்டத்துத் தீ மூட்டப்படவேண்டும். ஒரு தடவை தீ அணைந்துவிட்டால், அத்துடன் யாகம் முடிந்ததாகக் கருதப்படும். எனவே, பகலில் மட்டும் யாகம்செய்தாலும், இரவில் தீயை எப்படிப் பாதுகாப்பது என்ற கவலை சப்த முனிவர்களுக்கு உண்டானது. அந்த வேலையைத் தங்களுடைய பத்தினிகள்—சப்தரிஷிகள் ஒவ்வொருவருக்கும் ஒரு பத்தினி இருப்பதை முன்பே கண்டோம்—அவர்களுக்கு தந்தார்கள்.

காலையிலிருந்து மாலைவரை சப்தமுனிவர்கள் யாகம் நடத்துவார்கள். இரவு வந்ததும், சப்த முனிவர்கள் எழுந்து, இளைப்பாற—உறங்கச் சென்றுவிடுவார்கள். அவர்களுடைய பத்தினிமார்கள், யாககுண்டத்தைச் சுற்றிலும் உட்கார்ந்து, யாகத்தீ அணைந்துவிடாமல் வளர்த்துக்கொண்டிருப்பார்கள்.

சப்தரிஷிகளின் மனைவியரைப் பற்றி முன்பே படித்திருக்கிறோம். அகலிகை, அநுசுயை, அருந்ததி, அதிதி, இரேணுகை, முதலானவர்கள் தங்களுடைய கணவர்களுக்குப் பதிலாக யாகக்குண்டத்துத் தீயைப் பாதுகாத்து வந்தார்கள். இரவு நேரம், யாகக்குண்டத்தைச் சுற்றிலும் ரிஷி பத்தினிகள் அமர்ந்திருக்கிறார்கள். யாகக்குண்டத்து வெளிச்சம் மட்டும் அவர்கள் முகங்களில் படுகிறது. முதலில் உற்சாகத்துடன், பகலில் நடந்தவற்றைப் பேசிக்கொண்டு, அவர்கள் தீயை வளர்க்கிறார்கள், நெய்யைப் பெய்தவண்ணம். பேச்சு மும்முரத்தில் எடுத்த வேலைகூட மறந்து, தீ தணிந்துவிடும் நிலைக்கு வந்துவிடுகிறது. பிறகு ஒருத்தி நினைவுகூற தீ மீண்டும் வளர்கிறது.

நேரம் ஆக, ஆக ஒவ்வொருவரும் சோர்ந்து கையை ஊன்றிச், சாய்ந்துகொள்கிறார்கள், கண்கள் உறக்கத்துடன் போராடுகின்றன, தூக்கக் கலக்கத்தில் பேச்சுத் தடுமாறி வருகிறது. மேலாடை தாழ்ந்து, ஆடைகள் குலைந்து காற்றில் தவழ்ந்துகொண்டிருக்கின்றன. காட்டில், இரவில், தன்னந்தனியாக இருப்பதால் தாங்கள் இருக்கும் கோலத்தைப்பற்றி அந்த ரிஷிபத்தினிகள் அதிகம் கவலைப்படவில்லை.

காட்டில், இரவில் அவர்கள் இருந்தது உண்மை. ஆனால் அவர்கள் தன்னந்தனியாக இல்லை. யாகக்குண்டத்துத் தீயைச் சுற்றி உட்கார்ந்திருந்தார்கள். யாகக்குண்டத்துத் தீயில் அக்னிதேவன் மறைந்திருக்கிறான் என்பதை அவர்கள் உணரவில்லை.

இரவு நேரம்! யாகக்குண்டத்து மத்தியில் அக்னிதேவன்! அவனைச் சுற்றிலும் ரிஷி பத்தினிகள்—அலங்கோலமான காட்சியில் அவர்கள் தமது அழகிய கைகளால்—மயக்கும் கண்களால்—அவன்மீது நெய்யை ஊற்றிக்கொண்டிருந்தார்கள். அவர்கள் செய்தது தீ வளரவேண்டுமென்பதற்கு. அதனால் அக்னிதேவனின் மனதில் காமத்தீ வளர்ந்துவிட்டது என்பதை அவர்கள் உணரவில்லை.

(தொடரும்)

'மன்றம்' சந்தா விபரம்

	உள்நாடு	வெளிநாடு
ஆண்டுக் கட்டணம்	6—0—0	7—8—0
ஆறு திங்கள் ,,	3—0—0	
தனி இதழ் ,,	0—4—0	0—5—0

தென்கடல் முத்து

[பரணன்]

முத்துக்கள், பழம் பெருங் காலந்தொட்டு மனி ன அறிந்துவைத்துள்ள நல்லொளி மணி ளிலே ஒருவகையினவாகும். அவற்றைப் பாற்றிப் புகழாத மனிதனில்லை ; விரும்பாத டில்லை ; பாராட்டிப் பேசாத இலக்கியமொழி ல்லை ; அவை ஏருத மன்னர்களின் மணி டியில்லை !

ஆன்றோர்களாலும் சான்றோர்களாலும் றப்பித்துச் சொல்லப்படும் ஒன்பதுவகை ணிகளிலே முத்தும் ஒன்ருகும். முத்துக் ளைப் பற்றிய குறிப்புகள் பழந்தமிழ் இலக்கி ங்களிலே ஆங்காங்கு இடம்பெற்றிருக்கின் ன. வடமொழியின் பழம்பெரும் இலக்கியங் ளிலும் முத்துக்கள் பலபடப் பாராட்டிச் சால்லப்பட்டிருக்கின்றன. தூய வெண்மைக் ம், பல்லுக்கும், பல்லொளிக்கும், உருண்டை டிவிற்கும் உவமை காட்டவந்த புலவர்கள் இலக்கியங்களின் பற்பல இடங்களில் முத்துக் ள உவமையாக எடுத்துக்காட்டியுள்ளனர். லகின் பிற மொழிகளை எடுத்துக்கொண்டா ம், முத்து இலக்கியப் புலவர்களால் போற் ப் புகழப்படும் பொருளாகத்தான் இருந்து ந்திருக்கிறது.

திராவிடத்தின் தென்பாண்டிக் கடலில் டைக்கும் முத்துக்களுக்கு ஈடான எடுப்பான த்துக்கள் உலகின் வேறு பகுதிகளில் டையா. சீரிலும் சிறப்பிலும், புகழிலும் ருமையிலும் பேர்பெற்றவைகள் திராவிடத் ன் முத்துக்கள்தாம். பாரசீக வளைகுடாவும், சுத்திரேலியாக் கடலும் பிற முக்கியமான த்துக்குளிக்கும் இடங்களானலும், அங்குக் டைக்கும் முத்துக்களைத் திராவிடத்தின் த்துக்களோடு ஒப்பிட்டுப் பார்த்தால், வை தரங்குறைந்து காணப்படுவனவாகும். த்துக்களுக்குப் பாண்டியநாடு பேர்பெற்றது பதைப் புலப்படுத்தவந்த பிற்காலத்து வையார் "பூழியர்கோன் தென்னுடு முத் டைத்து" என்று சிறப்பித்துக் கூறினர். அழகாய் முத்து குவியும் கடல்கள்" என்று ாவிடநாட்டு வாழ்த்துப் பாடலில் புரட்சிக் ஞர் பாரதிதாசன் அவர்கள் கூறியிருப் ம் நோக்கத்தக்கதாகும்.

பண்டைக்காலத் தமிழக வாணிகத்தில், முத்துக்களின் ஏற்றுமதி, முக்கியமான ஒரு இடத்தைப் பெற்றிருந்திருக்கிறது. தமிழகத் தின் முத்துவாணிகம் எகுபதியம், உரோமம், கிரேக்கம், பாரசீகம், சீனம் ஆகிய பண்டைப் பெரும் நாகரிக நாடுகளிளெல்லாம் பரவி நின் றது. அந்த நாடுகளின் சந்தைக்கூடங்களி லெல்லாம் தமிழக முத்து வாணிகர்கள் அந்த நாட்களில் செல்வச் செழிப்போடு உலாவி வந்தனர். தென்பாண்டிக் கடலில் முத்துக் கள் அரிக்கப்பட்டு, அவைகள் யவனநாடுகள் சென்று குவிந்த செய்திகளைப், பிளினி (Pliny), தாலமி (Ptolemy) போன்ற யவன ஆசிரியர் களும், 'பெரிபுளுசு' என்ற நூலை எழுதிய யவன ஆசிரியரும் தங்கள் பழம் நூல்களிலே குறிப்பிட்டுள்ளார்கள். எகுபதியத்தை ஆண்ட எழிலரசியான கிளியோபாத்திரா தன் காதலனை அந்தோனியைக் கவரவேண்டியும், அவன்மீது தான் கொண்ட காதலன்பைத் தெரிவிக்கவேண்டியும், அவன் நலத்தின் அறி குறியாக என்று, தான் கழுத்தில் அணிந் திருந்த முத்துவடத்திலிருந்து ஒரு முத்தினை எடுத்து, அதனை நெரித்துத், திராட்சைச் சாற்றில் கலக்கி, உண்டாளாம். முத்து திராட் சைச் சாற்றில் கரையுமா என்ற ஐயப்பாடு ஒரு பக்கம் இருந்தபோதிலும், அது எவ்வளவு உயர்ந்த ஒரு பொருளாக அந்த நாட்களி லேயே மதிக்கப்பட்டு வந்திருக்கிறது என்ப தற்கு இந்தச் செய்தி ஒரு எடுத்துக்காட்டா கும். முகலாய அரசர்கள் முத்துக்களையும், முத்துச்சிப்பி ஓடுகளையும் புத்தகங்களிலும், மாளிகைகளிலும் பதியவைத்து அழகு பார்த்து அகமகிழ்ந்தார்களாம். பண்டைக் காலந்தொட்டே தமிழர்கள் உடலுறுப்புகளில் அணியும் பல்வேறுவகை அணிகளாக முத் துக்களைப் பயன்படுத்தி வந்துள்ளனர். சிலம்பி னுள் போடும் பரற்கற்களாக முத்துக்களைப் போட்டனர் என்ற செய்தி சிலப்பதிகாரத்தின் வாயிலாக அறியக்கிடக்கின்றது. சேரன் செங் குட்டுவன் வடநாட்டிலிருந்து கொண்டுவந்த வெற்றிப் பரிசுகளில் 'முத்துப் பந்தலு'ம் ஒன் ருகும். அரசன் அரண்மனைகளிலும், ஆண் டவன் கோயில்களிலும் எந்த ஒன்றை அழகு

படுத்துவதற்கும் முத்து ஒரு பெரும் பற்றுக் கோடாகப் பயன்படுத்தப்பட்டு வந்திருக்கிறது.

தென்பாண்டிக் கடலாகிய மன்னர் வளைகுடாவில் முத்துக்குளித்தல் என்பது வரலாற்றுக்காலத்துக்கு முன்புதொட்டே நடைபெற்றுவருவதாகும். முத்துக்கள் பாண்டி நாட்டு மன்னர்களுக்குப் பெரும்பொருள் ஈட்டித்தந்ததோடு, வேறு யாராலும் போட்டிப் போட முடியாத அளவுக்குச் செல்வச்செழிப்பையும் செல்வாக்கையும் ஏற்படுத்தித் தந்தன. முத்துக்குளித்தல் பாண்டிய மன்னர்களுக்குரிய தனியுரிமையாக நெடுங்காலம் வரையில் இருந்துவந்தது. 'முத்துக்குளித்தல் தொழிலைப் பரதவர் என்னும் பெயர்படைத்தோர், பாண்டிய மன்னர்களுக்காகச் செய்து வந்தனர். பண்டை நாட்களில் முத்துக் குளித்து முத்துக்கள் கொண்டுவந்து குவிக்கப்படும் இடம் கொற்கைத் துறைமுகமாகும். முத்துக்குளிக்கும் பரதவர்கள், பாண்டிய மன்னர்களிடம் நல்ல பல சலுகைகள் பெற்று வாழ்ந்துவந்தனர். ஐரோப்பியர்கள் வருவதற்கு முன்பிருந்தே முத்துக்குளித்தல் என்பது நல்ல அமைப்போடு அமைந்த தொழிலாக இருந்துவந்தது.

முகலாயர் படையெடுப்பிற்குப் பிறகு இஸ்லாம் பரவ, மூர் என்ற பிரிவினர்க்கும், பரதவர்களுக்கும் முத்துக்குளிப்பதில் அடிக்கடி சண்டை சச்சரவுகள் ஏற்படத்தொடங்கின. போர்த்துக்கேசியர் கொச்சியில் வந்து இறங்கித், தென்னாட்டில் ஆதிக்கம் பெறத் தொடங்கியவுடன், அவர்கள் மூர்களுக்கு எதிராகப் பரதவர் பக்கம் நின்று, பரதவர்க்குப் பாதுகாப்பு அளித்தனர். பரதவர்களில் பெரும்பாலோர் கிருத்தவர்களாக நாளடைவில் மாறினர். போர்த்துகேசியர்கள் மூர்களையும், மதுரை நாயக்க மன்னர்களையும் எதிர்த்து நின்று முத்து வாணிகத்தைத் தங்களுக்கு உரிமையுடையதாக ஆக்கிக்கொண்டனர். தென்னாட்டில் போர்த்துகேசியர் ஆதிக்கம் குலைந்து, டச்சுக்காரர் ஆதிக்கம் ஏற்பட்டவுடன், தூத்துக்குடியும் அதனைச் சேர்ந்த முத்துக்குளிக்கும் இடங்களும் கி. பி. 1658-ல் டச்சுக்காரர்களின் கைக்கு மாறின. டச்சுக்காரர்கள் பாண்டியநாட்டு அரசர்களுக்குச் சிறிதளவு காணிக்கை செலுத்திவிட்டு, முத்து வாணிகத்தை நடத்திவந்தனர். பத்தொன்பதாம் நூற்றுண்டின் தொடக்கத்தில் ஆங்கிலேயர்கள், இந்தியத் துணைக்கண்டத்தைக் கட்டி ஆளத்தொடங்கியவுடன், முத்துக்குளித்தல் அரசாங்கத்தின் நேரடிக் கண்காணிப்பின் கீழ்க் கொண்டுவரப்பட்டது. அரசாங்கத்தால் நியமிக்கப்படும் கண்காணிப்புத் தலைவர் (Superintendent) ஒருவர், தூத்துக்குடியில் இருந்துகொண்டு, முத்துக்குளித்தலை மேற்பார்வை பார்த்துவருகிறார்.

கிளிஞ்சல்போன்று இருக்கும் முத்துச்சிப்பிகளை உடைத்துதான், உள்ளிருந்து முத்துக்களை எடுக்கின்றனர். சிப்பிப்புழு தன் மேல் ஓடுகளை, எப்படிப்பட்ட பசைநீரால் உண்டாக்குகிறதோ, அதே பசை நீரால்தான் உள்ளே முத்துக்களையும் உண்டாக்குகிறது. சிப்பிக்குள்ளே உண்டாகும் முத்து உருண்டை வடிவாகவும், பல படைகள் ஒன்றனமீது ஒன்று அடுக்காக அமைந்ததாகவும் உருவாகும்; அது நீரோட்டம் வாய்ந்ததாகவும், தனியொளி வீசுவதாகவும் இருக்கும். சிப்பிப்புழுக்கள் ஆறு அல்லது ஏழு ஆண்டுக்காலம் வளர்ச்சியுற்றதற்குப் பிறகுதான முத்துவை உற்பத்தியாக்கும் தன்மையைப் பெறுகின்றன. அவைகள் வளர்ச்சியுறும் நிலைமையிலிருக்கும்போது எந்தவகையிலும் அவைகள் அலக்கழிக்கப்படக்கூடாது. அவைகள், நிலையாகப் பொருந்தியிருக்து வளருவதற்குக், கடினமான பாறைகள் கடலடியில் தேவைப்படுகின்றன.

நமது முன்னோர்கள், சிப்பியின் வயிற்றில் முத்து உருவாவதற்கு வியப்புக்குரிய காரணத்தைக் கூறிவந்தனர். சிப்பி கடலின் மேற்பரப்பில் வந்து நீந்தும்போது, அது வாய்திறந்திருக்க, அதன் வாயில் மழைத்துளி ஒன்று விழ, அது அதன் வயிற்றுக்குள்போ... அந்தத் துளியே நாளடைவில் முத்தாக மா...விடுகிறது என்று கருதிக்கொண்டனர். அந்தக் கற்பனை உண்மையாராய்ச்சிக்குப் பொருந்திவருவதாக இல்லை. உள்ளபடி இயற்கையான முத்து வேறுவகையில் உ...வாகின்றது. மிகச்சிறிய நுண்ணிய பு... ஒன்று சிப்பி ஓட்டுக்குள் புகும்படி நேரி...விட்டால், அது அங்குப் போனவுடன் இறந்துவிடுகிறது; இறந்த புழுவைச்சுற்றிச் சிப்பிப்புழு, ஒருவகைப் பசைநீரால் உருண்டை...வாகச் சுவர் எழுப்புகிறது; சிப்பிப்புழு அந்தச் சுவரைப் பெரிதாக்கிக்கொண்டே போகிற... அதுதான் முத்து என்று பெயர்பெறுகிற... சிப்பியின் ஓட்டுக்குள் புகுவது வேறொரு பு...வாகத்தான் இருக்கவேண்டுமென்பதில்லை. வேறு எந்தப் புறப்பான பொருளா... மணலோ, தூசியோ, சக்கையோ எது... இருந்தாலும், அதனைச் சுற்றி உருண்டை... கோட்டையைச் சிப்பி எழுப்பிவிடும்; அ... நாளடைவில் முத்தாகக் காட்சியளிக்கும். சிப்பிகளில் இரண்டு மூன்றுக்கு மேற்ப...

முத்துக்களும் இருப்பதுண்டு. சிப்பியோடுகள் எப்படிப் பல்வேறு அளவினவாகக் காட்சி யளிக்கின்றனவோ, அப்படியே முத்துக்களும் பல்வேறு அளவினதாகக் காணப்படும். தூய வெண்மையும், நீரோட்டமும், பளபளப்பும் தெற்குக் கடல் முத்துக்களுக்குத் தனிச் சிறப்பை அளிப்பனவாக இருக்கின்றன.

மன்னார் வளைகுடாவில் தூத்துக்குடிக்கரை யோரத்திலும், இலங்கைக் கரையோரத்திலும் முத்துக்குளிப்பு நடைபெறுகிறது. இலங்கைக் கரையோரத்தில் கடல் சிலாபம் (சிலாபத் துறை) கள்ள சிலாபம் (சியலாவ்) ஆகிய இடங்கள் முத்துக்குளிப்புக்குப் பேர்போனவை. தூத்துக்குடியிலும் இலங்கையிலும் முத்துக்குளிப்பு ஓரிரு ஆண்டுகளில் அடுத்தடுத்து நிகழ்வதாக இருக்கும். முத்துக்குளித்தலைச் சிலர் முத்துச்சலாபம் என்றும் அழைப்பர். சலம்+லாபம்=சலலாபம்=சலாபம். அதாவது முத்து சலத்தில் (நீரில்) கிடைக்கும் லாபம் என்னும் பொருள்படும்.

தென்பாண்டித் துறைமுகத்தில் இராமேசுவரத்திலிருந்து குமரிமுனை வரையில், ஏறத்தாழ 100 மைல் தொலைவிற்குள், முத்துக்குளிக்கும் இடங்கள் அமைந்துகிடக்கின்றன. இந்தப் பகுதியை (1) வடபகுதி (2) நடுப்பகுதி (3) தென்பகுதி என்று மூன்றாகப் பகுக்கலாம். இராமேசுவரத்திலிருந்து வைப்பாறு வரையிற் வடபகுதியாகும். வைப்பாற்றிலிருந்து மணப்பாடு வரையில் நடுப்பகுதி அல்லது தூத்துக்குடிப் பகுதி எனப்படும். மணப்பாட்டிலிருந்து குமரிமுனை வரையில் தென்பகுதி என்று அழைக்கப்பெறும். இவற்றில் நடுப்பகுதியான தூத்துக்குடிப் பகுதிதான் மிக முக்கியத் தன்மைவாய்ந்தது. இங்குதான் ஏராளமான முத்துச்சிப்பிகள் அரிக்கப்படும்.

கடல் நீருக்கடியில் திட்டுத்திட்டாக அமைந்துள்ள கடினமான பாறைகளில்தான் முத்துச் சிப்பிகள் உறையும். சில பாறைகள் சில சதுக்க அடி பரப்பினவாகவும், சில பல சதுக்க மைல்கள் பரப்பினவாகவும் விளங்கும். முத்துச்சிப்பிகள் சுமார் 60 அடி ஆழத்திற்குள்ளேயே உறையும். மிக ஆழமான கடலுக்கடியிலேயோ, அல்லது மணலும் சேறும் தேங்கிய பகுதிகளிலோ அவை உறையா.

தூத்துக்குடியில் இப்பொழுது முத்துக்குளிக்கும் இடங்கள் தொள்ளாயிரம் பாறை, தத்தாடியார் பாறை, வடவொன்பத்தூர் பாறை, சைதொம்பத்தூர் பாறை ஆகியவை யாகும். தொள்ளாயிரம் பாறைதான் ஏராளமான சிப்பிகள் வாழக்கூடிய மிகப்பெரிய பகுதியாகும். அது ஏழுமைல் நீட்டமும், இரண்டுமைல் அகலமும் கொண்டது.

முத்துக்குளித்தல் ஒழுங்குபட நடைபெறுகின்றது என்றாலும், இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு என்ன முறையைக் கையாண்டார்களோ, அதே முறைதான் இப்பொழுதும் கையாளப்படுகிறது. முத்துக்குளிக்கும் நாட்களில் தூத்துக்குடிப் பகுதி வணிகர்களாலும், படகு உரிமையாளர்களாலும், முத்துக்குளிப்போராலும், வேடிக்கைப் பார்ப்போராலும் நிறையப்பெற்றிருப்பதில் வியப்பில்லை. 28 ஆண்டுகளுக்கு முன்பு 1927-ல் முத்துக்குளிப்பு தென்பாண்டிக் கடலில் நடைபெற்றது; இப்பொழுது 1955-ல் மீண்டும் நடைபெறுகின்றது.

திராவிடத்தின் ஒப்புயர்வற்ற செல்வங்களில் முத்து முக்கியமான ஒன்றாகும். இவ்வாண்டு மட்டும் மூன்றுகோடி முத்துச்சிப்பிகள் அரிக்கப்படக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எதிர்பார்க்கும் பலன் கிட்டாது என்றும் கருதப்படுகிறது. காரணம் பல சிப்பிகளில் முத்துக்கள் சரியானபடி உருவாகவில்லை என்று கூறப்படுகின்றது. முத்துக்களே இல்லாமலும், அரையும் குறையுமாகவும் அமைந்த சிப்பிகள் பலவாக இருக்கின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது. முத்துச் சிப்பியைப் பற்றிய நல்ல ஆராய்ச்சிகளை நடத்தி, ஏராளமான முத்துக்களை உற்பத்தியாக்கும் வழிவகைகளைக் கண்டால், அதனால் திராவிடம் எவ்வளவோ செல்வவளம் மிக்கதாக விளங்கலாம்.

அகில உலகச் சந்தைகள் அத்தனையையும் பிடிக்கக்கூடிய ஒரு பெரும்பொருள்தான் முத்து. அதனை ஏராளமாக உற்பத்தியாக்கி, அவைகளை உலகச் சந்தைகளுக்கு அனுப்பி வைத்தால், அவைகள் டாலர்—பவுன்—உரூபில் ஆகியவற்றைப் பெரும் அளவில் ஈட்டித் தரும். திராவிடத்தின் அரும்பெருஞ் செல்வமான முத்துக்களைப் பேணி வளர்ப்போமாக! பிளினியின் காலத்திற்கு முன்புதொட்டு உலகச் சந்தைகளில் பெரும்புகழ் எய்திவரும் தென்கடல் முத்து மீண்டும் மிகப்பெரும் புகழ் எய்துமாக!

[இது தோழர் டி. எச். தண்டபாணி அவர்கள் எழுதிய "இந்தியாவின் முத்துக்குளிப்புகள்" என்ற ஆங்கிலக் கட்டுரையைத் தழுவி எழுதப்பட்டதாகும்.]

வினாவும் விளக்கமும்

கேள்வி : தொழிலாளர்க்கும் திராவிட முன்னேற்றக் கழகத்துக்கும் என்ன தொடர்பு? மே விழாவைக் கொண்டாட திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு உரிமை ஏது?

விளக்கம்: இப்படிப்பட்டக் கேள்வியைப் பெரும்பாலும் தமிழகத்திலுள்ள கம்யூனிசுட்டுக் கட்சியைச் சேர்ந்தவர்கள் அடிக்கடி எழுப்பிய வண்ணம் இருக்கின்றனர்.

தொழிலாளர்க்கும் திராவிட முன்னேற்றக் கழகத்துக்கும் தொடர்பு இருக்கிறதா இல்லையா என்ற உண்மையைக் கண்டறிந்து உலகுக்குச் செப்பவேண்டும் என்பதல்ல அவர்களின் முக்கிய நோக்கம். தங்கள் கட்சியை விட்டுத் தொழிலாளர்கள் வெளியேறாமல் பார்த்துக்கொள்ள வேண்டியும், தொழிலாளர்களின் ஆதரவு தங்கள் கட்சியை விட்டுத் தி. மு. கழகத்திற்கு எந்தவிதத்திலும் போய்விடாமல் அதனைக் கட்டிக் காத்துக்கொள்ள வேண்டியும், அவர்கள் மேற்கண்ட கேள்வியை எழுப்பவேண்டிய நிலைமையிலிருக்கிறார்கள்.

தொழிலாளர்க்கும் தி. மு. கழகத்துக்கும் தொடர்பு இல்லை; எனவே மே விழா கொண்டாட அதற்கு உரிமையில்லை என்ற கருத்துக்களை வெளியிடுவதன் மூலம், கம்யூனிசுட்டுத் தோழர்கள், மன ஆறுதல்பெற விரும்புகின்றனர். கம்யூனிசுட்டுகள் தப்புக் கணக்குப் போட்டு மன ஆறுதல் அடைவதிலே நமக்கு ஒன்றும் தீங்கில்லை. பலவற்றைப் பற்றியும் தப்புக்கணக்குகள் போடுவது என்பது இந்தியக் கம்யூனிசுட்டுகளுக்கு வழக்கம் ஆகிவிட்ட பழக்கமாகும். அதன் விளைவு அவர்களைத்தான் திருப்பித் தாக்குமே ஒழிய, தி. மு. கழகத்தை நேரடியாகத் தாக்காது. ஆனால் அந்தத் தப்புக்கணக்கைக் கேட்டு மயங்கும் பொதுமக்களுக்குத்தான் நாம் விளக்கம் தரவேண்டிய நிலைமையிலிருக்கிறோம்.

தி. மு. கழகத்தில் என்னமோ பிர்லாக்களும் பசாசுகளும்; முத்தையாக்களும் அழகப்பாக்களும், மன்னர்களும் மடாதிபதிகளும், மிட்டாக்களும் மிராசுகளும், பூமான்களும் சீமான்களும் மட்டுமே உறுப்பினர்களாகியிருப்பதாக நினைத்துக்கொண்டு, தொழிலாளர்க்கும் தி. மு. கழகத்திற்கும் என்ன தொடர்பு என்று கேட்கின்றனர், பொறாமையால் அறிவுக்கண் குருடாயினோர். திராவிட முன்னேற்றக் கழகத்திலுள்ள நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது பேர்கள், பாடுபடும் பாட்டாளிகளும், தொழில் செய்யும் தொழிலாளிகளும் ஆவார்கள். தி. மு. கழகத்தை, வேறு ஏதேனும் பொருத்தமான பெயர் ஒன்று இட்டு அழைக்கவேண்டுமானால், எல்லாத்துறைத் தொழிலாளர்களும் இணைந்துள்ள 'பொதுத் தொழிலாளர் கழகம்' என்று அழைக்கலாம், அந்த அளவுக்கு முழுக்க முழுக்கத் தொழிலாளர்களின் ஈடுபாடுடைய கழகமாகும். திராவிடத்தின் அரசியல்—பொருளாதார—சமுதாயத் துறைகளில் குறிப்பிட்ட மாற்றங்கள் வேண்டும் என்று விரும்பும் எல்லாத்துறைத் தொழிலாளர்களும் ஒன்றாக இணைந்து நின்று உருவாக்கியதுதான் தி. மு. கழகம். தி. மு. கழகத்தில் ஈடுபாடுடைய தொழிலாளர்கள் எல்லோரும், தொழிலாளர்களின் தனி ஏற்றத்துக்கும் பாடுபடுகிறார்கள்; நாட்டின் பொது ஏற்றத்துக்கும் பாடுபடுகிறார்கள். திராவிடத் தொழிலாளர்களின் ஏற்றத்துக்கான சீரிய அமைப்பு ஒன்று இருக்கமுடியும் என்றால்—இருக்கிறது என்றால், அது தி. மு. கழகமேயாகும்.

தொழிலாளர்கள் எழுச்சி பெறுவதற்காகக் கொண்டாடப்படும் விழாதான் மேநாள் விழா. அதனைக் கொண்டாடத் தி. மு. கழகத்திற்கு இல்லாத உரிமை, திராவிடத்தில் வேறு எந்த அமைப்புக்குத்தான் தனியே அமைந்துவிட முடியும்? மே நாள் விழாவைத் தமிழ்நாட்டில் முதன் முதல் கொண்டாடிக்காட்டியது, திராவிட இயக்கத்தோடு தொடர்புடைய சுயமரியாதை இயக்கந்தான். மே விழாவைக் கொண்டாடும் உரிமை தி. மு. கழகத்துக்கு இல்லை என்றால், வேறு எந்த அரசியல் அமைப்புக்குத்தான் இருந்துவிடமுடியும்? மே விழாவைக் கொண்டாடும் முழுத் தகுதி மிகச்சிறக்கத் தி. மு. கழகத்திற்கு உண்டு; எல்லாவகைத்

தொழிலாளர்களும் இணைந்து நின்று கழ த்தை வளர்த்துவரும் காரணத்தால்!

தி. மு. கழகத்தில் உள்ள பணக்காரர்கள் ன்று யார் ஒருவரை எடுத்துக்கொண்டா ம், அவர்கள் கம்யூனிசுட்டுக் கட்சியிலுள்ள தோழர்கள் டாங்கே, நாகிரெட்டி, மோகன் மாரமங்கலம், தங்கமணி ஆகியவர்களைக் ட்டிலும் செல்வச் செழிப்பில் குறைந்தவர் ளையொழிய, மேலோங்கியவர்களல்லர். அப் ப்பட்டவர்களைக் கொண்டிருக்கும் கம்யூ ட்டுக் கட்சிக்கு இருக்கும் மேனாளைக் கொண் டும் தகுதி, தி. மு. கழகத்துக்கு மட்டும் ப்படி இல்லாமல் போகும்?

திராவிட முன்னேற்றக் கழகம், இதுநாள் ரையில், கழகத்தின்பேரால் தனித் தொழிற் கம் அமைக்காமல் இருந்துவருகிறதேயல் மல், தி. மு. கழகத் தோழர்கள் பல்வேறு தொழிற்சங்கங்களில் இணைந்திருந்து தொண் ற்றாமல் இருந்துவிடவில்லை. தி. மு. கழகம் துவரையில் தனித் தொழிற்சங்கம் அமைக் மல் இருந்ததற்குக் காரணம், அமைக்க லாமற்போனதல்ல; அமைக்க வேண் ம் என்று எண்ணியதால். தொழிற்சங்கம் த் தனிக்கட்சிச் சார்புடையதாகவும் இருக் கூடாது. எல்லாக்கட்சித் தொழிலாளர் ளும் இணைந்த பொது அமைப்பாகத் தாழிற்சங்கம் இருக்கவேண்டும் என்றுதான் மு. கழகம் எண்ணிவந்தது—எடுத்துக் றிவந்தது. இந்த உயரிய நோக்கம் நிறை றவேண்டும் என்றுதான் தி. மு. கழகம் ன்றும் விரும்புகிறது. ஆனால் இப்பொழுது அரசியல் கட்சிகள் தனித்தனித் தொழிற் கங்களைக் கட்சி அடிப்படையில் அமைத் க்கொண்டு இருப்பதாலும், அவைகள் கட் தொழிற்சங்கங்களையெல்லாம் கலைத்து ட்டுப், பொதுவான தொழிற்சங்கத்தை மைக்க முன்வராத காரணத்தாலும், திரா முன்னேற்றக் கழகமும் தனித் தொழிற் கம் ஒன்றினை அமைத்துக்கொள்ளத்தான் ண்டும் என்ற நிலைமைக்குக் கழகம் பிற சிகளால் துரத்தப்பட்டிருக்கிறது. தொழிற் கங்களெல்லாம் கட்சி அடிப்படையில் மைந்திருப்பதால், திராவிட முன்னேற்றக் கத் தொழிலாளத் தோழர்கள் எந்தப் பிற சித் தொழிற்சங்கத்திலும் சேரமுடியாதவர் ாய்த் தனியே விடப்பட்டவராகிறார்கள். வே தாங்களும் கட்சி அடிப்படையில் ாழிற்சங்கம் காணுவதைத் தவிர வேறு யில்லை என்ற நிலைமைக்கு வந்துவிட ண்டியவர்களாக இருக்கிறார்கள். இக்கார பற்றிதான் பேரூரில் நடைபெற்ற தி. மு. க. பொதுக்குழுக் கூட்டம், தொழிற்சங்கம் காணுவதற்கான சூழ்நிலையை உருவாக்கிக் காட்டும்படி ஆங்காங்குள்ள தொழிலாளத் தோழர்களைக் கேட்டுக்கொண்டுள்ளது. அடுத் துக் கூடப்போகும் இரண்டாவது மாநில மாநாட்டில் தொழிற்சங்கம்பற்றிய தீர்மானம் நிறைவேறக்கூடும்.

திராவிட முன்னேற்றக் கழகம் தனித் தொழிற்சங்கம் நிறுவாத காரணத்தால், அதற்கும் தொழிலாளர்க்கும் தொடர்பில்லை என்ற முடிவுக்கு யாரேனும் வந்திருப்பார்களே யானால். அவர்களும் விளக்கம்பெறும்படியான நிகழ்ச்சிகள் விரைவில் நடந்தேறும் என்பது தெளிவு.

கம்யூனிசுட்டுகள் தி. மு. கழகத்தைப் பற் றிக் கேள்வி எழுப்புகிறார்கள் என்றால் உண் மையை அறிந்துகொள்ளவேண்டும் என்ற நல்ல எண்ணத்தால் அல்ல; கழகத்தைப் பற்றிப் பொதுமக்கள் தவறாகக் கருதிக்கொள் ளட்டும் என்பதற்காகவேயாகும். கழகம் தனித் தொழிற்சங்கம் வைத்து நடத்தாமல் இருந்தால், "ஏன் நடத்தவில்லை?" என்று அவர்கள் கேட்பார்கள், நடத்தினால், "ஏன் நடத்துகிறது?" என்று கேட்பார்கள். எனவே தான், கழகம் மாற்றார்களைப்பற்றிக் கவலைப் படாமல், பொதுமக்கள் மன்றத்தைப் பற்றிக் கவலைகொண்டு பணியாற்றி வருகிறது,

திராவிட முன்னேற்றக் கழகம், தொழிலா ளர் நலத்தில் மிகமிக அக்கறைகொண்டிருக் கும் காரணத்தால்தான், தொழிலாளர்கள் பெருவாரியாகத் தி. மு. கழகத்தில் இணைந் துள்ளார்கள் என்பதை வினா எழுப்புவோர் அறிவார்களாக!

❖ ❖ ❖

கேள்வி : மொழி—பண்பாடு—நாகரிகம் ஆகியவற் றில், இந்தியத் துணைக்கண்டத்தில், ஆரியம்— திராவிடம் என்று இரு வேறு பாகுபாடுகள் உண்டு என்று சொல்வதெல்லாம் ஆங்கில வரலாற்றாசிரியர் கள் கட்டிவிட்டக் கதைகளே யல்லாமல் உண்மை யின்பாற்பட்டவையல்ல என்று சிலர் கூறுவது சரிதானா?

விளக்கம் : ஆரியம்—திராவிடம் என்ற இரு வேறு பாகுபாடுகள் இல்லாமலிருந்திருக்கக் கூடாதா என்று எண்ணுபவர்கள், அந்த எண்ணமே வரலாற்று உண்மையாக நின்று நிலைத்துவிடக்கூடாதா என்று ஏங்குபவர்கள் ஆகியோரே கேள்வியில் கண்டுள்ள கருத்துக்

சாதாரணக் கால்சட்டை

ஆரம்பப் பயிற்சியாளர் அடிப்படையாகத் ரிந்துகொள்ளவேண்டிய சாதாரணக் கால் டை இங்கு விளக்கப்பட்டுள்ளது. இதில் ருந்தே வெவ்வேறு தோற்றமுள்ள பல கையான கால்சட்டைகள் தோன்றுவதால் தன் அமைப்பு முறை, பாக பிரிவினைகளை கு அறிந்திருப்பது மிகவும் முக்கியம். தந் கால்சட்டைக்கு இடுப்புப்பட்டி ண்டு) கிடையாது. (பாட்டம்) முன்னங்கால் ட்டைமடிப்பு இல்லை, ஒற்றை மடிப்புள் பட்டி அகலம் அணிபவரின் விருப்பப்படி மைத்துக்கொள்ளலாம்.



கால் சட்டைகளுக்கு மூல் அளவு (ஸ்கேல்) புட்டம் சுற்று அளவில் இருந்து கணக்கிட வேண்டும். அதாவது புட்டத்தின் சுற்றள வில் பாதி அளவையே மூல அளவு (ஸ்கேல்) எனக் கொள்ளவேண்டும்.

அளவுகள்

நெடுங் கால் நீளம்	42	அங்குலம்
அடிக்கால் நீளம்	30	,,
இடுப்புச் சுற்றளவு	30	,,
புட்டம் சுற்றளவு	36	,,
முழங்கால் சுற்றளவு	21	,,
முன்கால் (பாட்டம்) சுற்றளவு	18	,,
மூல அளவு (ஸ்கேல்)	18	,,

படம்—1

0, 2, 14, 1 எண்கள்வரை துணியின் ஓரம்.
1-ல் இருந்து 0 வரை $42\frac{1}{4}$ அங்.
(முழு நீளம் $+\frac{1}{4}$ அங்.)
2-ல் இருந்து 1 வரை $30\frac{1}{4}$ அங்.
(அடிக்கால் அளவு $+\frac{1}{4}$ அங்.)
3-ல் இருந்து 2 வரை 6 அங்.
(ஸ்கேல் 3-ல் ஒரு பாகம்)
4-ல் இருந்து 3 வரை $3\frac{1}{4}$ அங்.
(ஸ்கேலில் 6-ல் ஒருபாகம் $+\frac{1}{4}$ அங்.)
5-ல் இருந்து 4 வரை 3 அங்.
(ஸ்கேலின் 6-ல் ஒருபாகம்)
6-ல் இருந்து 5 வரை $\frac{1}{2}$ அங்.
(குறி ஒதுக்கம்)
7-ல் இருந்து 4 வரை 6 அங்.
(ஸ்கேலில் 3-ல் ஒருபாகம்)
8-ல் இருந்து 0 வரை $9\frac{1}{2}$ அங்.
(4, 2-க்கும் உள்ள அளவு)
9-ல் இருந்து 8 வரை 2 அங்.
(இடுப்புப்பட்டி அகலம்)
10-ல் இருந்து 0 வரை 2 அங்.
11-ல் இருந்து 9 வரை 8 ,,
($\frac{1}{4}$ இடுப்பு அளவு $+\frac{1}{2}$ அங்.)
12-ல் இருந்து 8 வரை $8\frac{1}{4}$ அங்.
13-ல் இருந்து 2 வரை 3 ,,
(ஸ்கேலில் 6-ல் ஒருபாகம்)
14-ல் இருந்து 2 வரை 13 ,,
($\frac{1}{2}$ அடிக்கால் அளவில் 2 அங். குறைவு)
15-ல் இருந்து 14 வரை 6 அங்,
(3, 2-க்கு உள்ள அளவு)
16-ல் இருந்து 1 வரை 6 அங்.
(15, 14 க்கும் உள்ள அளவு)
17-ல் இருந்து 16 வரை $4\frac{1}{2}$ அங்.
($\frac{1}{4}$ முன்னங்கால் அளவு)
18-ல் இருந்து 16 வரை $4\frac{1}{2}$ அங்.)

(தொடரும்)